பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 13 திங்கட்கிழமை (29.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 345

## கோதுமை மா விலை அதிகரிப்பின் எதிரொலி

### பாண் +10, பணிஸ் +5, கொத்துரொட்டி +10, சிற்றுண்டிகள் +5 ரூபாய்களால் அதிகரிப்பு

(கொழும்பு)


இலங்கையில் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்படுவதாக தகவல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் பாண், கொத்துரொட்டி உட்பட்ட உணவுப் பொருட்களின் விலையை அதிகரிக்க சிற்றுண்டி உரிமையாளர் 15



யாழ்.கந்தரோடையிலும்

## சிலிண்டர் அடுப்பு வெடித்துச் சிதறியது

பெரும் குழப்பத்தில் மக்கள்



(யாழ்ப்பாணம்) சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் எரிவாயு அடுப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை வெடித்துச் சிதறியுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

ஊடகவியலாளரை தாக்கியமை

## 3 இராணுவத்தினர் கைதாகி விடுதலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் பிராந்திய ஊடகவியலாளரும் முல்லைத்தீவு ஊடக அமையத்தின் பொருளாளருமான விஸ்வலிங்கம் விஸ்வச்சந் 15

நெடுந்தீவு கடற்கரையிலும்

## ஆணின் சடலம் கரையொதுங்கியது

### இதுவரை 3 சடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலமொன்று நேற்று ஞாயிற் 15

# தமிழர் பகுதிகளில் இராணுவ ஆட்சி!

## கொந்தளிக்கிறது எதிர்க்கட்சி



*(கொழும்பு)*

- மாவீரர் நாளில் தமிழர் பகுதிகளில் இராணுவத்தினர் நடந்து கொண்ட விதம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.
- ஊடகவியலாளர் தாக்கப்பட்டமை மற்றும் மாவீரர் நாள் கைதுகள் என்பன இராணுவ ஆட்சியையே எடுத்துக் காட்டுகிறது.
- தமிழர் பகுதிகளில் ஆயுதப் படைகளின் செயற்பாடு நாட்டுக்கே அபகீர்த்தி.
- இறந்தவர்களை நினைவுகூர அனைவருக்கும் உரிமையுண்டு.

*(3ஆம் பக்கம் பார்க்க)*

## 12 வயது மகனை தாக்கிய தாய்

### கொடிகாமத்தில் கைது

(அராலி)

கொடிகாமம் பகுதியில் 12 வயது மகனை வீட்டில் இருக்க வேண்டாம் என அடித்து விரட்டிய தாயார் கொடிகாமம் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய 15

கொரோனாவால்

## 27 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 27 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு குறித்த தகவலை வெளியிட் 15

## தொடர் வாந்தி; பெண் மரணம்

### கிளிநொச்சியில் சோகம்

(யாழ்ப்பாணம்)

தொடர் வாந்தி மற்றும் தலைச்சுற்று என்பவற்றால் அவதிப் 15

## தமிழரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

### ஐ.நா வலியுறுத்தல்

(ஜெனிவா)

நாட்டின் சிறுபான்மையினரையும் உள்ளடக்கிய ஆட்சி நிர்வாகம், சிறந்த குடிமைத் தொடர்பு (சிவில் சமூகத்தொடர்பு) மற்றும் 15

## ஒற்றையாட்சிக்குள் தீர்வினை ஏற்கத் தயாராக இல்லை

### கஜேந்திரகுமார் எம்.பி ஐ.நாவிடம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் எந்தவொரு அரசியல் தீர்வினையும் ஏற்றுக் 15

கடற்படையின் தேவைக்காக

## மாதகலில் இருவேறு இடங்களில் இன்று காணி அளவீடு

### போராட்டத்துக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மாதகலில் கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை அபகரிக்கும் முயற்சிக்காக காணி அளவீட்டுப் பணிகள் இன் 15

## மதம்மாற்றிகள் மூவர் மாங்குளத்தில் கைது!

(மாங்குளம்)

மாங்குளம் பகுதியில் மத மாற்றம் செய்யும் நோக்குடன் வீடொன்றுக்குச் சென்ற மூவர் அடங்கிய குழுவினர் பிரஸ்தாப வீட்டு உரிமையாளரையும் குடும்ப உறுப்பினர்களையும் அச்சுறுத்தியதுடன் அவர்களின் வழிபாட்டுத் தெய்வங்களை நிந்தித்தும் தூற்றியும் உள்ளனர். 15

வடக்கு, கிழக்கில்

## இடியுடன் கூடிய கன மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் கிழக்கு பகுதியில் வங்காள விரிகுடாவில் உரு 15

# மரண அறிவித்தல்



## திரு. வீரவாகு வீரகுமார் (ஜேர்மனி)

இந்திரன் அம்மன் கோவிலடி, துன்னாலை மத்தி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட வீரவாகு வீரகுமார் ஜேர்மனியில் நேற்று முன்தினம் (27.11.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவாகு மற்றும் கமலாதேவி தம்பதியரின் பாசமிகு மகனும் அஜித்தாவின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் சுகிர்தன், சுகிர்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தி (ஜேர்மனி), ஜெயந்தி (ஆசிரியை - யா/ தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியநாதன் (ஜேர்மனி), சிவகுமார் (நெல்லியடி மத்திய கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் மாதினி (ஜேர்மனி), சாளினி (ஜேர்மனி), மாதுஷா (மாணவி - யா/ மெதடிஸ்த பெ.உ. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-3112).

தொடர்புகளுக்கு :
திரு. திருமதி பாக்கியநாதன் சாந்தி
0491787834800

தகவல் :
திரு. திருமதி சிவகுமார் ஜெயந்தி
(சகோதரி)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்
திரு. **உலகநாதன் தனசங்கர்** அவர்களின்
அன்புத் தந்தை

அமரர்

## சின்னத்துரை உலகநாதன்



அவர்களின் மரணச் செய்திகேட்டு மிகவும் கவலை அடைந்துள்ளோம். இதனால் துயரமடைந்திருக்கும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆன்மா இறைவன் சந்நிதியில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள்
யா / இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் – வரணி

(C-3116)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# கண்ணீர் அஞ்சலி

வரணி இடைக்குறிச்சி
ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய அதிபர்
**உலகநாதன் தனசங்கர்** அவர்களின் தந்தை

அமரர்

## சின்னத்துரை உலகநாதன்

( ஓய்வுநிலை அதிபர் – வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் )



அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர் சங்கம்
தென்மராட்சி

(C-3115)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி


அமரர்

## நாகலிங்கம் சிவகுருநாதன் (அப்பு)

( பிரபல புகையிலை வியாபாரி )
மண்டைதீவு

திதி : கார்த்திகை மாத தேய்பிறை தசமி

பாசவலை விரித்து
பக்குவமாய் எமை தாங்கி
நேசக்கரம் நீட்டி
நெஞ்சம் எமை அணைத்து
நெஞ்சுரம் கொண்டு
நேர்வழி நடந்து
ஏற்றம் இறைத்த
எங்கள் காரியவானே!
காலனிடம் தோற்றது ஏன்?
ஆதவன் ஒளி இழந்து
நினைவை சுமந்து
மனம் மகிழ்விழந்து
ஆண்டு மூன்று
அப்பாவின் துணையிழந்து
எம் உள்ளத்தில் நீங்கள் இருக்க
இல்லத்தில் ஏது குறை "அப்பா?



பிறப்பு
12.12.1944

இறப்பு
02.12.2018

றம்பைக்குளம்,
வவுனியா.

(8823)

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# நாட்டில் நடப்பது காட்டாட்சியே



## மாவீரர் நாளில் படைகள் நடந்த விதம் குறித்து எதிர்க்கட்சி கடும் கண்டனம்

(கொழும்பு)

**மாவீரர் நாளான நேற்று முன்தினம் வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் மேற்கொண்ட அராஜகங்களைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வன்மையாகக் கண்டித்துள்ளது.**

தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கில் ஆயுதப் படைகள் நடந்து கொண்ட விதம் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது.

“நாட்டின் இராணுவ ஆட்சிக்கு இதுவொரு சிறந்த எடுத்துக்காட்டு” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் தமது கண்டனங்களை வெளிப்படுத்தினர்.

இதன்போது மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, “வடக்கில் மக்களை மட்டுமல்ல ஊடகவியலாளரையும் படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். அதேவேளை, சிலர் கைதுசெய்யப்பட்டும் உள்ளனர். இந்த அராஜக நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றோம். இறந்தவர்களை நினைவேந்த அனைவருக்கும் உரிமை உண்டு.

இதில் இன, மத, மொழி வேறுபாடு காட்டக்கூடாது” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் “நாட்டில் தற்போது நடப்பது காட்டாட்சி என்பதை வடக்கு, கிழக்கில் மாவீரர் நாளன்று அரச படைகள் நடந்து கொண்ட விதம் எடுத்துக்காட்டுகின்றது.

போரில் இறந்தவர்களை அமைதியாக நினைவேந்த பல இடங்களில் நீதிமன்றமே அனுமதி வழங்கிய நிலையில் அதையும் மீறி இராணுவத்தினருடன் சேர்ந்து பொலிஸார் நடந்த கொண்ட விதத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாட்டில் இன ரீதியில் - மத ரீதியில் - மொழி ரீதியில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமெனில் தமிழர்களுக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்.

அவர்களை உள ரீதியில் மேலும் காயப்படுத்தக்கூடாது” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும் கண்டனத்தை வெளியிட்டார். (நி)

## மாநகர முதல்வர் மாவீரர்களுக்கு அஞ்சலி



(குப்பிழான்)

மாவீரர் வாரத்தின் இறுதிநாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ் .மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். (நி-5-18)

## பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்த முதலை



(திருமலை)

திருகோணமலை மூதூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சம்பூர் பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்த முதலை ஒன்று நேற்றுக் காலை திருகோணமலை வனஜீவரா சிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்டு உப் பாறு பாலத்திற்கு கீழாக உள்ள ஆற்றுப் பகுதியில் விடுவிக்கப்பட்டது.(நி-5)

## தடைவிதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து இரு வாரங்களில் எவரும் வருகை தரவில்லை

(கொழும்பு)

தென்னாபிரிக்கா, நமீபியா, பொட்ஸ்வானா, சிம்பாப்வே, லைசதோ மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து கடந்த 14 நாட்களில் சுற்றுலாப் பயணிகள் எவரும் நாட்டுக்கு வருகைத் தரவில்லை என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் புள்ளிவிபரங்கள் இதனை உறுதிப்படுத்துவதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தவிர்ந்த வேறு எவரேனும் நாட்டுக்கு வருகை தந்துள்ளார்களா என்பதைக் கண்டறிய சுகாதார தரப்பினரால் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒமிக்ரோன் திரிபின் அபாயம் காரணமாக மேற்குறிப்பிட்ட நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு நேற்று இரவு முதல் இலங்கை வர தடைவிதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## விரும்பியவாறு மருந்துகளை உள்ளெடுக்க வேண்டாம்

### சுகாதார மேம்பாட்டு பணியகம் எச்சரிக்கை

(கொழும்பு)

வைரஸ் தொற்றினால் ஏற்படும் தடிமல் மற்றும் காய்ச்சல் போன்ற நோய்களுக்கு கூட தாம் விரும்பியவாறு நுண்ணுயிர் எதிர்ப்பு (Antibiotic) மருந்துகளை உட்கொள்வது உகந்தது அல்ல என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இது ஒரு பயங்கரமான விளைவைத் தரக்கூடியது என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் தனது முகப்புத்தகத்தில் ஒரு குறிப்பை வெளியிட்டுள்ளது. (நி-5)

## ஏல விற்பனைக்கான கேள்வி அறிவித்தல் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

யாழ். போதனா வைத்தியசாலையில் 2020 ஆம் ஆண்டுக்கான பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களை ஏல விற்பனை செய்தல்.

தலைவர், ஏலவிற்பனை சபை 2020 ஆம் ஆண்டு பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து கேள்வி மனு கோரப்படுகின்றது.

01. ஏலவிற்பன்ன தேசிய போட்டிப் பெறுகைகள் முறைக்கு (NCB) அமைவாக இடம்பெறும்.
02. ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் மார்கழி **(December)** மாதம் 06, 07, 08 ஆகிய மூன்று தினங்களும் காலை 9.30 மணி முதல் மாலை 2.00 மணி வரை இல.111, பிரதான வீதி, மடத்தடியில் உள்ள யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக் களஞ்சியத்தில் ஏலவிற்பனைக்கான பொருட்களை பார்வையிட முடியும்.
03. பொருட்களைப் பெறுவிரும்புபவர்கள் வைத்தியசாலைக் காசாளரிடம் ரூபா 500.00 இனை செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று கேள்விமனு பத்திரத்தினை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
04. மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 10,000.00 இனை வைத்தியசாலைக் காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்று பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பிரதியினையும் இணைத்து கேள்விமனுப் பத்திரத்தினை பூரணப்படுத்தி மூடிய கடித உறையினுள் இட்டு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள பெட்டியினுள் 09.12.2021 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பாக இடுதல் வேண்டும்.
05. அன்றைய தினம் மதியம் 12.00 மணியளவில் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்படும். அதிகூடிய தொகையினை விண்ணப்பித்த கேள்விதாரர், காசாளரிடம் அத்தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று மறுநாள் வெள்ளிக்கிழமை (10.12.2021) மாலை 04.00 மணிக்கு முன்பாக பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.
06. கேள்விமனு மூலம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அப்பொருட்களை பெறுவதிலிருந்து விலகுவராயின் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணத்தினை மீளப்பெற முடியாது என்பதோடு எதிர்வரும் காலத்தில் வைத்தியசாலையில் இடம்பெறும் ஏலவிற்பனையிலும் பங்குபெற தகுதியற்றவராக கருதப்படுவார்.
07. மேற்படி ஏலவிற்பனை தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் அதிகாரம் ஏலவிற்பனை சபைக்கு உரியதாகும்.
08. மேலதிக விபரங்களை வைத்தியசாலைக் கணக்காளரின் தொலைபேசி இலக்கம் 021-2223149, 021-2212482 இனை அழைத்துப் பெற்றுக் கொள்ள முடியும்.

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**
**29.11.2021**

C-3108

# கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி வவுனியா அணி முதலிடம்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் தேசிய ரீதியிலான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த மூன்று நாட்களாக யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வந்த நிலையில் இறுதி போட்டி நேற்று யாழ். சுன்னாகம் ஸ்கந்தா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட வீரர்கள் தங்களுடைய மாவட்டத்தை பிரதிபலிக்கும் முகமாககளம் இறங்கினர்.

இப்போட்டியானது நொக்கவுட் முறையில் இருந்த மையால் ஆரம்பத்தில் இருந்தே அனைத்து போட்டிகளும் விறுவிறுப்புக்கு பஞ்சம் இல்லாமல் இருந்த நிலையில், அரையிறுதி ஆட்டத்திற்குள் வவுனியா அணியை எதிர்த்து மட்டக்களப்பு அணியும் மன்னார் அணியை எதிர்த்து இரத்தினபுரி அணியும் மோதிக் கொண்ட இப்போட்டியில் இறுதிப் போட்டிக்கு வவுனியா அணி மற்றும் இரத்தினபுரி அணிகள் மோதிக் கொண்டன.

இப்போட்டியானது சம நிலையில் முடிவடைந்தமையினால் பனால்ட்டி முறையில் வெற்றி தீர்மானிக்கப் பட்டது 5:3 என்ற கோல் கணக்கில் வவுனியா அணி வெற்றி வாகை சூடியது.

இதேவேளை இரண்டாம் இடத்தினை இரத்தினபுரி அணியும் மூன்றாவது இடத்தினை மன்னார் அணியும் கைப்பற்றிக் கொண்டது. (4-104)


## மணிவிழா வாழ்த்து




திருமதி

**வதனராணி சிவசோதி**

( முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் )

*சேவைக் காலம் : 30 வருடங்கள்*

*மணிவிழா நாள் : 28.11.2021*

தங்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன்
ஓய்வுக் காலத்தில் மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(C-3114)

வாழ்த்துவோர் :

ஊழியர் நலன்புரிச் சங்கம்

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம் - நல்லூர்


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2459

Search for people, places and things

### கஸ்தனி

சூரியன் -லைட்டா நான் எட்டி பார்த்ததும் கொழுப்பு வச்சிருச்சுல்ல உனக்கு?



துணி துவைக்க சோப்பும் கையுமா நிக்கிற?

### லிதுஜா

துணி துவைக்கும் போது வெயில் அடிக்குது காயப்போட போனா மழை வந்துருதே



அந்த வேதனை இருக்கே.. அந்த வேதனை

### தியாழினி

பொண்ணுங்க சண்டை போடனும்னு முடிவு பண்ணிட்டா பெரிய காரணம் எல்லாம் தேவையில்ல,
நாம காபி டம்ளரை டொம்முன்னு கொஞ்சம் வேகமா வச்சிட்டாலே போதும்டா



### விதேஷ்

காலையில வெயில் அடிக்குது திடீர்னு இருட்டா ஆகுது சரியான மழை பெய்து



Repeat u

### கவிதாஷ்

ஸ்பெயின் தக்காளி பண்டிகை



தக்காளி விலை தெரியுமாடா உங்களுக்கு



### மதுஷன்

Biology teacher- செல் என்றால் உயிர் அணு
Physics teacher- செல் என்றால் Battery
Maths teacher- செல் என்றால் விற்பனை
Social teacher-செல் என்றால் Jail
Tamil teacher- செல் என்றால் போ
English teacher- செல் என்றால் Mobil phone

இப்படி ஒவ்வொரு period ஒவ்வொரு மாதிரி சொல்லிகொடுத்தா என்னாங்க நியாயம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

29.11.2021
கார்த்திகை 13, திங்கட்கிழமை
தசமி முன்னிரவு 11.44 மணிவரை
உத்தரம் மாலை 5.54 மணிவரை
சுபநேரம்- 12.13-1.43 மணிவரை
இராகு காலம்- 7.43-9.13 மணிவரை
சந்திராஷ்டமம்-சதயம், பூரட்டாதி

வளவன்


மேஷம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.


ரிஷபம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.


மிதுனம்

நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், விருந்தினர் சந்திப்புண்டு.


கடகம்

குடும்பத்தினரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


சிம்மம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


கன்னி

ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.


துலாம்

நடப்பதெல்லாம் நன்மைக்கேயெ நினைக்க வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள்.


விருச்சிகம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


தனுசு

குடும்பத்தில் ஒற்றுமை கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.


மகரம்

குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.


கும்பம்

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.


மீனம்

உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், போசன சுகமுண்டு.

பொறுத்தல் கசப்பாய் இருந்தாலும் பொறுக்கப் பொறுக்கத் தித்திப்பு


# பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



Congratulations

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை
இயந்திரப் பிரிவில்
22 வருடங்கள் மின் உதவியாளராகவும்
6 வருடங்கள் வல்வெட்டித்துறை
பிரதேச வைத்தியசாலையில்
பதில் மேற்பார்வையாளராகவும்
கடமை ஆற்றி 28 வருட கால
சேவையில் இருந்து
ஓய்வு பெற்றுச் செல்லும் அகில இலங்கை
சமாதான நீதிவான், தேசாபிமானி

## பொன். கஜேந்திரன்

அவர்களை மனதார வாழ்த்துகிறேன்.

அன்புடன் வாழ்த்தும்
இயந்திர மேற்பார்வையாளர்,
ஆதார வைத்தியசாலை
பருத்தித்துறை
அகில இலங்கை சமாதான நீதிவான்
தேசாபிமானி கந்தப்பு- கிரிதரன்,
சொற்பொழிவாளர்
சிவனடி சான்றோன்

(சி-3110)


# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம், மாதகல் ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்


வட்டாரம்- 05
ஆதன இல -54/2(வெற்றிலக்கம்)
வீதி –ஞானவைரவர் கோவில் வீதி
கிராம சேவையாளர் பிரிவு – J/151
வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு

எமது இடாப்பில் மேற் குறிப்பிடப்பட்ட இலக்கத்தில் அமைந்துள்ள இவ் ஆதனமானது, உறுதிப்படி வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகல் இறை "செம்பிளாச்சி" பரப்பு நெல் இலாச்சம் மூன்று இதற்கு எல்லைகள்,

கிழக்கு: பொன்னுத்துரை தேவராசாவுக்குரிய ஆதனம்;
வடக்கு: செல்வரத்தினம் கந்தசாமிக்குரிய ஆதனம்;
மேற்கு : சூசைமுத்து ஆனாசிமுத்துவின் ஆதனம்;
தெற்கு : வாய்க்கால் , இதடங்கலும்

இன்னும் வீதியிலிருந்து இறங்கி வாய்க்கால் வழியாக வடக்கு நோக்கி சென்று பின் மேற்கு நோக்கிச் செல்லும் ஆறு (6) முழ ஒழுங்கை பாவிப்புரித்தும். இதற்குரிய கிணற்றுப் பங்கும் தண்ணீர்பாதை பாவிப்புரித்தும் தற்போது நீக்கப்பட்டது.

குறித்த இவ் ஆதனமானது உறுதி இலக்கங்கள் 6887/ 30.06.2009 (ப.இராசகுரு) , 7092/20.12.2009 (ப.இராசகுரு) , என்பவற்றின்படி யேசுரத்தினம் அன்ரனி சூரியகுமாரிற்கும் பெண் யூட்சினி என்பவருக்கு அறுதியாக வந்தடைந்தமையினை உறுதிப்படுத்தி எமது பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனவரிப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.அ. சந்தியாப்பிள்ளை அவர்களால் அளந்து வரையப்பட்ட 3055 ம் இலக்க 16.03.2020ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு யாரும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யேசுரத்தினம் அன்ரனி சூரியகுமாருவுக்கும் பெண் யூட்சினிக்கும் எனும் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் , இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் எவ்வித குறைபாடுகள், பிரச்சினைகள், பிசகு தடைகளிற்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி ஆக மாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.





திரு.அ.ஜெபநேசன்,
தவிசாளர்,
வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபை,
மானிப்பாய்.

(8817)

## 'ஒமிக்ரோன்' திரிபினால்
# மீண்டும் முடக்கநிலை ஏற்படும் அபாயம்!
## எச்சரிக்கிறார் மருத்துவர் யமுனாநந்தா

(யாழ்ப்பாணம்)

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட கொவிட் வைரஸின் புதிய திரிபான ஒமிக்ரோன் திரிபு மருத்துவ சமூகத்தை மீளவும் விழிப்படைய வைத்துள்ளதுடன் உலகினை மீண்டுமொரு முடக்க நிலைக்கு இட்டுச் செல்லும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என யாழ். போதனா பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.



இத்திரிபானது தென்னாபிரிக்காவில் அதிகம் இளம் வயதினரையே தாக்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இத்திரிபினது பரவல் வீதத்தைக் கட்டுப்படுத்த பொது மக்கள் சமூகப் பொறுப்புடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் எனவும் இதுவரை தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் தடுப்பூசியை விரைந்து பெற்றுக் கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இத்திரிபினை கட்டுப்படுத்த பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயமாகச் செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-5)

## விடத்தல் தீவில்
# 6 ஏக்கர் விவசாயச் செய்கை கால்நடைகளால் அழிவு



(மன்னார்)

மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட விவசாயச் செய்கையை கால்நடைகள் சேதப்படுத்தியுள்ளன.

இது தொடர்பாக உரிய அதிகாரிக்கு தகவல் வழங்கிய நிலையிலும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல்தீவு கிராமத்தில் அமைந்துள்ள நட்டாம்பிட்டி எனும் விவசாய நிலப்பரப்பில் விடத்தல்தீவு கிராம விவ சாயிகள் காலம்காலமாக பெரும்போக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்ச் செய்கையானது கடந்த வாரம் பெருமளவான மாடுகளினால் அழிக்கப்பட்டமையினால் குறித்த விவசாய நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன.


சுமார் 6 ஏக்கர் விவசாயச் செய்கை இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட விவ சாயிகள் தெரிவித்தனர்.

எனவே பிரதேசச் செயலாளர், அரசாங்க அதிபர் மற்றும் உரிய அதிகாரிகள் தமது வாழ்வாதாரப் பிரச்சினைக்கு உரிய தீர்வை உடன் பெற்றுத்தர வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-285)

## இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறப்பு

(அக்கராயன்)

இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதன் காரணமாக முரசுமோட்டை, பன்னங்கண்டி, கண்டாவளை, வட்டக்கச்சி ஆகிய பகுதிகளின் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறு கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.



இரணைமடுக் குளத்தின் நான்கு வான் கதவுகள் நேற்றுக் காலையில் திறக்கப்பட்டுள்ளன. தற்போது குளத்தில் இருந்து வெளியேறுகின்ற நீர் கனகராயன் ஆறு வழியாக கடலைச் சென்றடைகிறது.

கனகராயன் ஆற்றுப் பக்கமாக தேவையற்ற முறையில் ஒருவரும் செல்ல வேண்டாம்.

குறிப்பாக சிறுவர்கள் புதினம் பார்ப்பதற்கு செல்ல வேண்டாம். இதேவேளை கூடுதலான மழை வீழ்ச்சி இடம் பெற்று இரணைமடுக் குளத்தின் ஏனைய வான் கதவுகளும் திறக்கப்படும் சந்தர்ப்பங்களில் தாழ் நிலப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் தற்காப்பு நிலையில் இருக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5-100-350)

## வீடு புகுந்து நகை திருட்டு


(கரணவாய்)

கரணவாய்ப் பகுதி வீடொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு புகுந்த திருடர்கள் ஒன்றரைப் பவுண் நகையைக் களவாடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். முறைப்பாட்டிற்கமைய நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-60)



யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் நாவலர் நினைவரங்கம் நாவலர் குருபூசை நன்னாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் இடம்பெற்றது. (படம்: ரவிசாந்)



குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற குடும்பங்களுக்காக இராணுவத்தினரால் வீடமைத்துக் கொடுக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், அல்வாய் மற்றும் தும்பளை பிரதேசங்களில் வசிக்கின்ற இரண்டு குடும்பங்களுக்கு அமைக்கப்படவுள்ள இரண்டு வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் வைபவமானது யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடித்துவக்கு தலைமையில் நேற்று நடைபெற்றது.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 360 | 360 | 320 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 350 | 400 |
| தக்காளி | 500 | 450 | 400 | 480 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 200 | 330 | 320 | 400 |
| கரட் | 260 | 300 | 320 | 400 |
| பூசணி | 60 | 60 | 60 | 80 |
| புடோல் | 280 | 240 | 240 | 300 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 240 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 160 | 160 |
| பாகற்காய் | 500 | 55 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 240 | 200 | 280 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 160 |
| பயற்றங்காய் | 600 | 500 | 300 | 400 |
| லீக்ஸ் | 350 | 280 | 320 | 400 |
| பீற்றூட் | 120 | 140 | 140 | 200 |
| கறிமிளகாய் | 500 | 400 | 600 | 480 |
| முருங்கைக்காய் | 800 | 450 | -- | 800 |
| போஞ்சி | 320 | 300 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 320 | 320 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 100 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 240 | 180 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 160 | -- | 250 |
| பொன்னாங்காணி | 50 | 90 | 80 | 50 |
| வல்லாரை | 25 | 240 | 40 | 30 |
| ஈரப்பலா | 80 | 160 | -- | 160 |

# 'ஒமிக்ரோன்' வைரஸில் 30 பிறழ்வுகள்



## மருத்துவர் சந்திம அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**தென்னாபிரிக்காவில் காணப்படும் ஒமிக்ரோன் வைரஸில் சுமார் 30 பிறழ்வுகள் இருப்பதாக மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.**

இதன் காரணமாக மக்கள் முறையான சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றி அவதானமாக இருப்பதுடன் பூஸ்டர் தடுப்பூசியைப் பெறுவதும் அவ சியம் என அவர் குறிப்பிட்டார். அரசாங்கத்தின் தற்போதைய முயற்சிகள் வெற்றியடைந்துள்ளதாகவும் வெளிநாட்டவர்கள் நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு தற்போதுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் போதுமானவை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த வைரஸை அடையாளம் காண நாட்டில் ஆய்வுகூட வசதிகள் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன் இந்த ஒமிக்ரோன் மாறுபாடு டெல்டா வகையை விட வேகமாகப் பரவக்கூடியதாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

இலங்கை அதனை தடுக்க நன்றாக தயாராக உள்ளது. இதற்கு பயப்படத் தேவையில்லை. ஒமிக்ரோன் நாட்டிற்குள் நுழைவதை முடிந்தவரை தாமதப்படுத்த வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்ட அவர்,

பூஸ்டர் தடுப்பூசி நமது நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. ஒமிக்ரோன் மாறுபாட்டிற்கு பயப்படத் தேவையில்லை. ஆனால் இந்த ஒமிக்ரோன் மாறுபாட்டின் கடுமையான விளைவுகள் பற்றி இன்னும் உலகில் யாருக்கும் தெரியாது.

சினோபார்ம் தடுப்பூசி இலங்கையில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. 3 மாதத்தில் அதன் செயற்பாடு குறைவதாக ஆராய்ச்சி காட்டுகிறது.

அத்தகைய சூழ்நிலையில் பூஸ்டர் தடுப்பூசி மிகவும் முக்கியமானது. பாதுகாப்பு உள்ளது என மேலும் தெரிவித்தார். (நி)

# சீரற்ற காலநிலையால் ஒரு வாரத்தில்

## ❖இருவர் பலி
## ❖சுமார் 19 ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஒரு வாரமாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இருவர் உயிரிழந்துள்ளதோடு 13 மாவட்டங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி முதல் நேற்றுக் காலை வரையான ஒரு வாரத்தில் மாத்தளை, கண்டி, இரத்தினபுரி, புத்தளம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் வெள்ளத்தில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, நேற்று முன்தினம் சனிக்கிழமை கண்டி - பூஜாப்பிட்டி பிரதேசத்தில் மரம் முறிந்து விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்தோடு 62 வீடுகள் பகுதியளவிலும் ஒரு வீடு முழுமையாகவும் சேதமடைந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் வெள்ளம், கடும் மழை, காற்று, மண்சரிவு என்பவற்றால் 5 ஆயிரத்து 666 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 845 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாதிப்புக்களுக்கு உள்ளான 694 குடும்பங்களைச் சேர்ந்த 173 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி-5)

# மீண்டும் குறைந்து வரும் மரக்கறி விலைகள்

(ஹற்றன்)

கடந்த சில நாட்களாக அதிகரித்து காணப்பட்ட காய்கறிகளின் விலைகள் கணிசமான அளவு குறைவடைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் கரட், லீக்ஸ் மற்றும் போஞ்சி ஆகிய மரக்கறிகள் 150 முதல் 200 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றன.

கெப்பெட்டிபொல, நுவரெலியா ஆகிய பொருளாதார மத்திய நிலையங்க்ள் மற்றும் மெனிங் சந்தையிலும் மரக்கறி விலைகள் குறைவடைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## வழங்குநர்களைப் பதிவு செய்தல்-2022

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2022 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருட்கள், வேலைகள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள், எழுதுபொருட்கள் உபகரணங்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகர்ணங்களும் |
| A - 03 | கணனி, இலத்திரனியல் பொருட்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள், மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ட், வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள் |
| A - 11 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள் |
| A - 15 | அலங்காரப் பொருட்கள் |
| A - 16 | மருந்துப்பொருட்கள் |
| A- 17 | மரக்கன்றுகள் மற்றும் சாடிகள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B- 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்றுக்குளிராக்கி, மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதலும், மீள முறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தகங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராம்ரிப்பும் |
| B- 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B- 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B- 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B- 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார்,முதலான வீதி மூலப்பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள்) |
| B- 10 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B- 11 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு |
| B- 12 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C - 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C - 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

- வழங்கல்கள் 2022ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
- ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக்கட்டணம் ரூ.1000.00 இனை செலுத்தி தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2022"** எனக்குறிப்பிட்டு **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்"** எனும் முகவரிக்கு 20.12.2021 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**க.தர்சன், தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**
**0212244045 / 0212240017**

(C-3109)

# கலிங்கமாகன் பற்றிய ஒரு கல்வெட்டு அண்மையில் கண்டறியப்பட்டது

திருகோணமலை மாவட்டத்தில் கோமரன்கடவெல/குமரன்கடவை என்னும் இடத்திலுள்ள காட்டில் அண்மையில் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) தலைமையில் ஓர் ஆய்வுக் குழுவினர் முக்கிய கல்வெட்டு ஒன்றைக் கண்டு வெளிப்படுத்தியுள்ளனர்.

தொடக்கத்தில் உள்ள சில சம்ஸ்கிருத வரிகளைத் தவிர ஏனைய வரிகள் தமிழில் உள்ளன. பாறையில் எழுதப்பட்டுள்ள இக்கல்வெட்டின் பல சொற்கள் அழிந்து விட்டன. கோயில் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட சில தானங்களைப் பதிவு செய்வதே கல்வெட்டின் நோக்கம். இக் கோயிலின் அழிபாடுகள் அங்கு காணப்படுகின்றன.

தானங்களை வழங்கி இக் கல்வெட்டைப் பொறிப்பித்தவன் பெயர் ஸ்ரீ குலோத்துங்க சோழகாலிங்கராயன் என்று கொடுக்கப்பட்டுள்ளது. இவன் 'ஈழமண்டலமான மும்முடி சோழ மண்டலம் எரிந்து, அதாவது இலங்கையைக் கைப்பற்றி, கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவர் என்பவருடைய வீராபிஷேகத்தையும் செய்தான் என்ற செய்தியும் இதில் கொடுக்கப்பட்டுள்ளது. இச் செய்தி தான் இக் கல்வெட்டுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றது.

**கங்கராஜா**

யார் இந்தக் கங்கராஜகாலிங்க விஜயவாகு தேவர்? நீண்ட காலமாக இந்தியாவின் பல பாகங்களில் கங்க வம்சத்தைச் சேர்ந்தோராகத் தம்மைக் கருதிய சிலர் கங்கராஜா என்ற பெயரைப் பெற்றிருந்தனர். வணிகம் வழியாக இந்தியச் செல்வாக்கு வெளியே பரவிய காலத்தில் தென் கிழக்காசியாவிலும் இப் பெயர் பரவியிருந்தது.

ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சம்பா என்ற வியட்நாமிய அரசில் ஆட்சி செலுத்திய முதலாம் பத்திரவர்மனுடைய மகன் ஒருவன் இப் பெயரைத் தரித்திருந்தான். இந்தியாவில் கங்கவம்சத்தினர் ஆட்சி செய்த இடங்களில் பலர் இப் பெயரைத் தாங்கியிருந்தனர். எடுத்துக்காட்டாக, பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒரு ஹொய்சள (போசள) மன்னனுக்கும் பதினாறாம் நூற்றாண்டில் கர்நாடகத்து உம்மத்தூரு என்ற இடத்தின் நாயக்கச் சிற்றரசனுக்கும் இப் பெயர் இருந்தது.

கங்க வம்சத்தைச் சேர்ந்தோராய் கிழக்கு இந்தியாவில் (இன்றைய ஒடிஷா மாநிலத்தில்) ஆட்சி புரிந்தோரைக் கீழைக்கங்கர் என்பர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பொலநறுவை அரசியலில் முக்கியத்துவம் பெறும் பல இளவரசர்களும் இளவரசியரும் கலிங்கத்திலிருந்து வந்த கங்க வம்சத்தினர்.



கல்வெட்டுக்களில் சிலருடைய பெயருடன் வம்சம் குறிப்பிடப்பட்டுள்ளது (எடுத்துக் காட்டாக, நிஸ்ஸங்க மல்லனுடைய அரசியருள் ஒருவர் கங்க வம்ச கல்யாணமஹாதேவி எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்). ஆகவே கங்கராஜா என இக் கல்வெட்டில் குறிப்பிடப்படுபவர் கங்க வம்சத்தைச் சேர்ந்தவர் என்பது தெளிவு.

**காலிங்க விஜயவாகு**

பொலநறுவையில் இருந்து ஆட்சி நடத்திய காலிங்க மன்னர்கள் முன்பு இருந்த சிங்கள மன்னர்களைப் போல் -வாகு என முடியும் பெயர்களையும் பொதுவாகச் சூடியிருந்தனர். நிஸ்ஸங்கமல்லன் பராக்கிரமவாகு என்ற பெயரையும், அவனுக்குப் பின் ஆண்ட இருவர் வீரவாகு, விக்கிரமவாகு என்ற பெயர்களையும் பெற்றிருந்தனர். நிஸ்ஸங்க மல்லன் சகோதரனாகிய ஸாஹஸ மல்லன் எனப்படும் மன்னன் காலிங்க விஜயவாகு எனக் கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளான்.

கோமரன் கடவெலக் கல்வெட்டில் வரும் விஜயவாகு இவனா? இக் கல்வெட்டின் காலம் என்ன என்று தெரிந்தால் இவ்வினாவுக்கு விடை காண்பது இலகு. துரதிஷ்ட வசமாக கல்வெட்டின் ஆண்டைக் கூறும் தொடக்கப் பாகம் தெளிவற்றுக் காணப்படுகின்றது. எனினும் ஸாஹஸமல்லனுடைய கல்வெட்டின் சான்றினை வைத்து இப்பிரச்சினையைத் தீர்க்கலாம்.

இதன்படி, இங்கு ஆராயப்படும் கல்வெட்டின் விஜயவாகு ஸாஹஸமல்லன் அல்லன் என்று கூறமுடியும். கல்வெட்டில் ஸாஹஸ மல்லன் கூறுவது இதுவாகும்: நிஸ்ஸங்க மல்லனுக்குப் பின் பொலநறுவையில் ஆட்சி நடத்துவதற்கு அவனுடைய சகோதரன் (ஒரே தகப்பன், தாய் வேறு) ஸாஹஸமல்லனுக்கு (கலிங்க நாட்டு ஸிங்ஹபுரத்துக்கு) இரு சிங்கள அமைச்சர்கள் தூது அனுப்பினர். அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, அவன் இலங்கைக்குப் புறப்பட்டான், வரும்போது சோழநாட்டுத்துறை ஒன்றில் சிறிது காலம் தங்கி இலங்கைக்கு வந்து முடி சூட்டப் பெற்றான். தன்னை அழைத்து மன்னனாக்கியதற்காக அமைச்சர் இருவருக்கும் தானங்கள் வழங்கி,ஒருவனுக்கு முதல் அமைச்சர் பதவியையும் ஸாஹஸ மல்லன் வழங்கினான். தனக்குச் சோழர்படையுதவி கிடைத்தது பற்றி எதுவுமே அவன் கல்வெட்டில் இல்லை. இதற்கு முற்றிலும் மாறாக, கோமரன்கட வெலக் கல் வெட்டில் வரும் காலிங்க விஜயவாகு முடி சூட்டப்பெற்ற சூழ்நிலை காணப்படுகின்றது.

அப்படியாயின் யார் இந்த விஜயவாகு? இவ் வினாவுக்கு விடை காணச் சிங்கள இலக்கியச் சான்று உதவுகின்றது. பொலநறுவை அரசை 1215 இல் கைப்பற்றிய கலிங்கமாகனுக்குக் காலிங்க விஜயவாகு என்ற பெயரும் இருந்தது என்பது நிகாயஸங்க்ரஹய மற்றும் ஸத்தர்ம-ரத்னாகரய ஆகிய நூல்களில் இருந்து தெரிய வந்த விடயமாகும். அத்துடன், இலக்கிய மூலாதாரங்கள் அனைத்தும் தென்னிந்தியப் படைகளின் உதவியுடன் மாகன் வெற்றிபெற்றான் என்று கூறுகின்றன. இங்கு ஆராயப்படும் கல்வெட்டில், காலிங்க விஜயவாகு குலோத்துங்க சோழ காலிங்கராயன் தலைமையிலான படையின் உதவியுடன் அரசைக் கைப்பற்றி மன்னனாகிய செய்தி கூறப்பட்டுள்ளது.

இவற்றைக் கொண்டு, இந்த காலிங்க விஜயவாகு வேறு யாரும் அல்ல, கலிங்கமாகனே என அடையாளம் காணமுடிகின்றது.

**காலிங்கராயன்**

காலிங்க விஜயவாகு ஆகிய கலிங்கமாகனின் படையெடுப்பில் மூன்றாம் குலோத்துங்க சோழன் (1178 - 1218) ஆகிய சமகாலச்சோழமன்னனுக்கும் பங்கு உண்டு என்று தோன்றுகிறது. விஜயவாகுவுக்கு உதவிய படைத்தலைவன் ஒரு சோழத் தளபதி என்று கொள்ள இடமுண்டு.

இவன் முழுப்பெயர் 'குலோத்துங்க சோழகாலிங்கராயன்'. இப் பெயர், சோழ மன்னர் தங்கள் படைத்லைவர்கள், குறுநில மன்னர், அதிகாரிகள் ஆகியோருக்கு பொதுவாக வழங்கிய விருதுப் பெயர்களை ஒத்துள்ளது. எடுத்துக்காட்டாக, குலோத்துங்க சோழ காடவராயன்,குலோத்துங்க சோழகச்சியராயன், குலோத்துங்க சோழவாணக் கோவரையன், குலோத்துங்க சோழசாம்பூவராயன், குலோத்துங்க சோழ தகடாதிராயன் போன்ற பெயர்களை ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது.

முதலாம் குலோத்துங்க சோழனுடைய தளபதிகளுள் மிகவும் வெற்றி ஈட்டிய ஒருவனாகிய நரலோக வீரனுக்கு காலிங்கராயன் என்ற விருது வழங்கப்பட்டிருந்ததையும் கவனிக்கலாம். அத்துடன், மூன்றாம் குலோத்துங்க சோழன் இலங்கையைக் கைப்பற்றப் பல தடவை முயன்றிருந்தான் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். பொலநறுவை அரசு பொது வாகச் சோழ அரசை எதிர்த்துப் பாண்டிய அரசுக்கு உதவி புரிந்தது. இக்குலோத்துங்க சோழன் காலத்திலும் இந்த நிலைமை தொடர்ந்தது.

ஈழத்துப் படைகளை வெற்றி கொண்டதாகக் குலோத்துங்கன் தன் கல்வெட்டுக்களில் பல தடவை கூறுகின்றான். சோழருக்கு எதிராகப் பாண்டியருக்கு உதவி செய்ய இலங்கை மன்னன் தென்னிந்தியாவுக்கு அனுப்பிய படையை 1187இல் வெற்றிகொண்டதாகக் கூறும் குலோத்துங்கன், அதன் பின்னர் இலங்கைக்குத் தன் படையை அனுப்பி வெற்றி கொண்டதாகக் கல்வெட்டுக்கள் வாயிலாகத் தெரிவிக்கின்றான்.

"ஈழத்தாந் முடி வாழ வாழத் தாளிணை சூட்டி... மதிரையும் ஈழமுங்கொண்டு" (திரு மாணிக்குழிக் கல்வெட்டு) என்றெல்லாம் சோழமன்னன் தன் வெற்றியைப் புகழ்ந்து கூறுகின்றான்.



கலாநிதி.கா.இந்திரபாலா

இலங்கையைத் தாக்குமாறு 1194இல் குலோத்துங்கன் தன் படைகளுக்கு ஆணை இட்டான் என்றும், பின்னர் 1199இல் மீண்டும் இலங்கைக்குப் படை அனுப்பப்பட்டது என்றும் அறிகின்றோம். இக் காலகட்டத்தில் இப்படிப் படையெடுப்புகள் நடந்தன என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அக்காலத்தில் எழுதப்பட்ட ஸஸதா வத என்ற சிங்கள நூல் சோழ நாட்டில் இருந்து மூன்று படையெடுப்புகள் நடந்தன என்று கூறுகின்றது.

மினிபே மற்றும் போபிட்டிய ஆகிய இடங்களில் கிடைத்த சிங்களக் கல்வெட்டுக்களிலும் சூளவம்சத்திலும் இப்படையெடுப்புகள் பற்றிய சான்று வெளிப்படுகின்றது. குலோத்துங்கன் இறுதியாக இலங்கைக்குப் படையனுப்பியது பற்றி 1212 இல் பொறித்த கல்வெட்டால் அறிகின்றோம். கலிங்கமாகனின் தாக்குதல் இதற்கு மூன்று ஆண்டுகளின் பின் நடைபெற்றது. இவற்றை எல்லாம் நோக்குமிடத்து காலிங்கராயன் என்பவன் சோழ மன்னனின் தளபதியாகப் படையுடன் வந்தவன் என்ற முடிவுக்கு வருவது தவிர்க்கமுடியாதது. மேலும் ஒரு முக்கிய விடயத்தை இம் முடிவுக்குச் சார்பாகக் கூற வேண்டும்.


இலங்கையைக் கைப்பற்றியது தன்னுடைய சாதனையாகக் காலிங்கராயன் கூறுகின்றான். அதுமட்டு மல்லாது, விஜயவாகுவுக்கு முடி சூட்டியதும் தன்னுடைய சாதனையாகக் கூறுகின்றான். இதைச் செய்வதற்கு அவனுக்கு எப்படி அதிகாரம் கிடைத்தது? பொதுவாக நம்பப்படுவதுபோல், விஜயவாகு தென்னிந்தியாவுக்குச் சென்று படை திரட்டி வந்து பொலநறுவையைக் கைப்பற்றியிருந்தால், அவன் திரட்டிய படையின் தளபதிக்கு முடி சூட்டும் அதிகாரம் இருந்திருக்காது.

(9 ஆம் பக்கம் பார்க்க...)

# ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம்; முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டம்

(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவத்தினை கண்டித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**




முல்லைத்தீவு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வட மாகாணத்தின் பல்வேறு ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் ,சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஊடகவியலாளர் மீதான தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்த வேண்டுமெனவும் ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்பட வேண்டும் எனவும் கோரி குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேசசபை தவிசாளர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் சமூக செயற்பாட்டாளர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-5-281)

# அலுவலகங்கள் உடைப்பு பொலிஸில் முறைப்பாடு




(அக்கராயன்)

முழங்காவில் கிராம உத்தியோகத்தர் அலுவலகம் மற்றும் சமுர்த்தி அலுவலகம் என்பன உடைக்கப்பட்டுள்ளதாக முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரவு வேளை இவ் அலுவலகங்கள் இனந்தெரியாத விசமிகளினால் உடைக்கப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பத்து நாட்களுக்கு முன்பு முழங்காவில் அன்புபுரம் முன்பள்ளி உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்ட நிலையில் தற்போது முழங்காவில் கிராம உத்தியோகத்தர் அலுவலகம் மற்றும் சமுர்த்தி அலுவலகம் என்பன உடைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக விசாரணைகளை முழங்காவில் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4-5-350)

# வீதியை மூடி வெள்ளம் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



(அக்கராயன்).

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானின் இத்திமடு கிராமத்திற்கும் தட்டார்மலைக் கிராமத்திற்கும் இடையிலான வீதியில் பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்பதன் காரணமாகப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.


இத்திமடுக் கிராமத்தில் உள்ள கச்சல்கொடி குளத்தின் நீர் வடிந்தோட முடியாமல் ஐந்து கிலோமீற்றர் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

தட்டார்மலை, பழம்பாசி, தண்டுவான், மாமடு, ஒதியமலை ஆகிய கிராம மக்கள் ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனை மற்றும் பிரதேச செயலகம் என்பவற்றிற்கு செல்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த வீதியின் வெள்ளம் வழிந்தோடவும் வீதியை புனரமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-350)

# வர்த்தக நிலையம் மீது மின்னல் தாக்கம்

(பனிக்கன்குளம்)



முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்துவருகின்ற நேரத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வர்த்தக நிலையம் மீது மின்னல் தாக்கியுள்ளது.

இதனால் கடைத் தொகுதியில் பொருத்தியிருந்த மின்மானி மற்றும் மின்னிணைப்புக்கள் சேதமாகியுள்ளன.

வர்த்தக நிலையத்தில் எவரும் இல்லாததால் எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. (4-5-281)

## ‘நொண்டி நாடகம்’ நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் பழமையான கூத்துக்களிலொன்றாகிய “நொண்டி நாடகம்” -தென்மோடிக் கூத்து நூல் இன்று திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் செம்மணி வீதியிலுள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்படும்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர். திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்வார். (4-5)

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

காலிங்கராயன் என்ற தளபதி சோழமன்னன் ஆணைப்படி இலங்கையைக் கைப்பற்றி விஜயவாகுவுக்கு உதவி செய்ய வந்த காரணத்தினாலேதான், வெற்றிக்குப் பின் விஜயவாகுவுக்கு முடிசூட்டும் அதிகாரத்தைப் பெற்றிருந்தான் என்று வாதிக்க முடியும்.

### யாழ்ப்பாண இராச்சியத்தின் தொடக்கம்

பொலநறுவையில் ஆண்ட கலிங்க இளவரசர்களும் இளவரசியரும் காலிங்கச் சக்கரவர்த்தி பரம்பரையைச் சேர்ந்தோர் என அவர்களுடைய கல்வெட்டுக்கள் தகவல் தருகின்றன. எடுத்துக் காட்டாக, நிஸ்ஸங்கமல்லன் தன் பெயரைக் கல்வெட்டுக்களில் நிஸ்ஸங்க மல்ல காலிங்கச் சக்கரவர்த்தி என்று கொடுத்துள்ளான். பொலநறுவையில் ஆண்ட பிற கலிங்கர்களைப் போலவே கலிங்கமாகனாகிய விஜய வாகுவும் இதே பரம்பரையைச் சேர்ந்தவன் என்று கொள்ளலாம். இதனால், இவன் பெயுர் விஜயவாகு காலிங்கச் சக்கரவர்த்தி என்றும் வழங்கியிருக்கும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டு இலங்கையின் வரலாற்றைத் திசை திருப்பிய இரு பெரும் நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம். இவற்றின் முக்கியத்துவத்தை உணர்வதற்கு இக் கூற்றினை இன்னொரு விதமாக அமைத்துக் கூறலாம்.

அதாவது, இந்த இரு நிகழ்ச்சிகளும் நடை பெற்றிருக்காவிட்டால் இலங்கையின் வரலாறு முற்றிலும் வேறாகச் சென்றிருக்கும். இந்த நிகழ்ச்சிகள் எவை? ஒன்று, பொலநறுவையின் வீழ்ச்சி. மற்றது, வடக்கில் யாழ்ப்பாண இராச்சியத்தின் எழுச்சி. இவை இரண்டிலும் கலிங்கமாகனுக்குப் பங்கு உண்டு.

மாகனுக்கு இருந்த எதிர்ப்பின் விளைவாக அவன் நீண்டகாலம் பொலன்னறுவையில் ஆட்சி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் அவன் வடக்கு நோக்கி நகர்ந்து இறுதியில் தூரவடக்கில் தன் ஆட்சி பீடத்தை நிறுவினான்.

இவன் தொடக்கிவைத்த அரசு பின்னர் யாழ்ப்பாண இராச்சியம் எனப் பெயர் பெறுகின்றது. இதன் தோற்றம் பற்றிய தெளிவான விபரங்கள் கிடைக்காத காரணத்தால் இதை மட்டுமே ஊகிக்க முடிகின்றது.

### கங்கவம்சக்குறியீடுகள்

வடக்கில் ஓர் இராச்சியத்தை அமைத்த கலிங்கமாகனுடைய வரலாற்று எச்சங்கள் எதுவும் உண்டா? உண்டு. முதலாவதாக, அவன் பெயர் மறக்கப்படவில்லை.

விஜய(வாகு) காலிங்கச் சக்கரவர் த்தி என்ற அவன் பெயர் விசய கூழங்கைச் சக்கரவர்த்தி ஆகி, யாழ்ப்பாண வரலாற்று மரபில் மறைந்து இருக்கிறது. இதனை இற்றைக்கு ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சுவாமி ஞானப்பிரகாசர் எடுத்து விளக்கியுள்ளார். ஏட்டுப் பிரதியின் எழுத்தில் காலிங்கச் சக்கரவர்த்தி என்பது கூளங்கச் சக்கரவர்த்தி ஆகி, பின்னர் கூழங்கைச் சக்கரவர்த்தி ஆகியது என்பது அவர் விளக்கம்.

கங்கராஜாஎனத் தன் கங்க வம்ச உறவினைப் பிரகடனப்படுத்தியகாலிங்க விஜயவாகு வடக்கில் ஆட்சி செலுத்திய போது கங்க வம்சக் குறியீடுகள் சிலவற்றை அங்கு புகுத்தியிருந்தான்.

சிறப்பாக, கங்க வம்சத்தினர் பயன்படுத்திய நந்தியும் பிறையும் (இடப லாஞ்சனை) யாழ்ப்பாண அரசின் சின்னமாகியது (கீழ்க்கங்கர்கள் செப்பேடுகளின் முத்திரையில் இதனைப் பயன்படுத்தினர்). யாழ்ப்பாண அரசர்கள் தங்கள் நாணயங்களிலும் கொடியிலும் இச்சின்னத்தைப் பயன்படுத்தினர்.

வடக்கில் அமைக்கப்பட்ட புதிய ஆட்சி பீடம் சிங்கை நகர் எனப்பட்டது. இது கங்க வம்சத்தினருடைய ஸிங்ஹபுரத்தை மனதில் வைத்து இடப்பட்ட பெயராக (ஸிங்ஹநகர்) கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் ஆட்சி நடத்திய மன்னர் கங்க வம்சத்தவர்என்பது மக்கள் மத்தியில் பதிந்திருந்தது என்பதற்கு அங்கு எழுதப்பட்ட தமிழ் நூல்களில் சான்று உண்டு. இவற்றில் சில சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்து மன்னர் கங்கை ஆரியர், கங்கநாடன் என்று வர்ணிக்கப்பட்டுள்ளனர். மன்னனுக்குஉதவிய சில உயர் குலத்தவர் கங்கா குலத்தவராகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவ்வாறாக, கங்கராஜ காலிங்க விஜயவாகு பற்றியும் குலோத்துங்க சோழகாலிங்கராயன் பற்றியும் தகவல் தரும் கோமரன்கடவெலக் கல்வெட்டு வரலாற்று முக்கியத்துவம் உள்ள ஒரு கல்வெட்டாகக் காணப்படுகின்றது.

(முற்றும்)

## இந்தியாவில்
# உறுப்புக்கள் தானமாக கிடைக்காததால்
# ஆண்டுதோறும் 5 இலட்சம் பேர் உயிரிழப்பு
## உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு

(ஜெனிவா)

**அறுவை சிகிச்சைக்கு தேவையான உடல் உறுப்புகள் கிடைக்காதமையினால் வருடந்தோறும் 5 இலட்சம் பேர் இந்தியாவில் உயிரிழப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

இந்தியா முழுவதும் தேசிய உடல் உறுப்பு தான தினம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அனுஷ்டிக்கப் பட்டது.

இதனை முன்னிட்டு தலைநகர் டில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பிரபல மருத்துவர் மனோஜ் குமார் சாஹூ, இந்தியாவில் உடல் உறுப்பு தானம் குறைந்து வருவது குறித்து உரை நிகழ்த்தினார்.

இதன் போது அவர் மேலும் கூறியதாவது.

"அறுவை சிகிச்சைக்கு தேவையான உடல் உறுப்புகள் கிடைக்காதமையினால் இந்தியாவில் வருடந்தோறும் 5 இலட்சம் பேர் உயிரிழப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளதாகவும் 1.5 இலட்சம் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் தேவை என்ற நிலையில், இந்தியாவில் வருடத்துக்கு 5 ஆயிரம் பேருக்கு மாத்திரமே அறுவை சிகிச்சை இடம்பெறுகின்றது.

அதேபோன்று சுமார் 2 இலட்சம் பேர் கல்லீரல் தானம் கிடைக்காததால் இறக்கின்றனர்.

அந்தவகையில் இந்தியாவில் உடல் உறுப்பு தான விகிதம் 0.01 சதவிகிதம் மாத்திரமே இருப்பதாக உலக சுகாதார அமைப்பு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன" என மருத்துவர் மனோஜ் குமார் சாஹூ குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள சென்றவர்களை மோதித்தள்ளிய லொறி

*18 பேர் உயிரிழப்பு

*ஐவர் காயம்



(வங்காளம்)

மேற்கு வங்காள மாநிலம், நாடியா மாவட்டத்தில் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்கு வானில் சென்றவர்களை லொறி மோதியதில் 18 பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது.

இறுதிச் சடங்கொன்றில் கலந்து கொள்வதற்காக வானில் சென்றவர்களை கற்கள் ஏற்றிக்கொண்டு வந்த லொறி,வான் மீது பயங்கரமாக மோதியது.

இந்தக் கோர விபத்தில் 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 5 பேர் காயம் அடைந்தனர். (நி-5)

## பிரித்தானியாவுக்குள் புகுந்தது ஒமிக்ரோன்

(லண்டன்)

பிரித்தானியாவில் இருவருக்கு புதிய கொவிட் மாறுபாடான ஒமிக் ரோன் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகச் சுகாதார செயலாளர் தெரிவித்துள்ளார். இந்தப் புதிய மாறுபாடு அடையாளம், தென்னாபிரிக்கா, போட்ஸ் வானா, பெல்ஜியம், ஹொங்கொங் மற்றும் இஸ்ரேலிலும் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளன.

உலகெங்கிலும் உள்ள நாடுகள் தற்போது ஒமிக்ரோனின் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தென்னாபிரிக்க நாடுகளுடனான பயணத் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதில் ஈடுபட்டுள்ளன. (நி-5)

## கஞ்சா பீட்சா
# தாய்லாந்தில் விற்பனை



(பாங்கொக்)

தாய்லாந்தின் முக்கிய துரித உணவுகளில் ஒன்றான "கிரேஸி ஹேப்பி பிட்சா" இந்த மாதம் முதல் அனைத்து கடைகளிலும் விற்பனைக்கு வந்துள்ளது. கஞ்சா சேர்த்து தயாரிக்கப் படுகிறது.

தாய்லாந்தில் கஞ்சா சட்ட விரோதமானது. அங்கு போதைப் பொருள் சட்டங்கள் கடந்த சில வருடங்களாக தாராளமயமாக்கப்பட்டிருந்தாலும், பெருமளவில் கஞ்சா வைத்திருந்தால் அபராதமும் சிறைவாசமும் விதிக்கப்படும். தனிநபர்கள் தங்கள் சொந்த நுகர்வுக்காக குறைந்த எண்ணிக்கையிலான கஞ்சாச் செடிகளை வளர்க்கவும் அங்கு அனுமதிக்கப்படுகிறார்கள். (நி-5)

## தடுப்பூசி போடத் தயங்கும் ஆஸ்திரியர்கள்
# கட்டாயப்படுத்தும் அரசாங்கம்

(ஆஸ்திரியா)

ஐரோப்பிய நாடான ஆஸ்திரியாவில், பெரும்பாலான மக்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாமல் இருப்பதாக தெரியவந்துள்ளது.

அண்மைய தரவுகள் படி, ஆஸ்திரியாவில் 66 சதவீதமான மக்கள் தான் தடுப்பூசி போட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரிய மக்களில் கணிசமானவர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ள மறுக்கின்ற நிலையில், எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி வரை அவர்களுக்கு காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கால எல்லைக்குள் தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்களுக்கு 3,600 யூரோக்கள் அபராதம் விதிக்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

அபராதம் செலுத்தாதவர்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். ஒட்டுமொத்த மக்களையும் தடுப்பூசி போட்டுக்கொள்ள கட்டாயப்படுத்தும் முதல் ஐரோப்பிய நாடு ஆஸ்திரியா தான். (நி-5)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>உயரம்:5'6"<br>கி.பா:45 செவ்8 இல் சூரி 11இல்<br>தகைமை/தொழில்: பொலிஸ்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12162 | பிறப்பு: 1985 இந்து<br>உயரம்: 5'7"<br>கி.பா:- செவ் 3 சூரி 3<br>தகைமை/தொழில்:உதவி பேராசிரியர்<br>விவாகரத்துப் பெற்றவர் குழந்தைகள் இல்லை.<br>எதிர்பார்ப்பு: கல்வி தகுதிக்கு ஏற்றவரன்<br>தொ.இ:G/12182 |
| பிறப்பு:1978இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்:-5'6"<br>கி.பா: செவ் 10 இல் சூரி8 இல்<br>தகைமை/தொழில்:ITபயிற்றுவிப்பாளர்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12163 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் 4<br>கி.பா:85 ¾செவ் 1சூரி1 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:-வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/12183 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:-மூலம் கி.பா: செவ் 6 இல் சூரி 11 இல்<br>உயரம்:175cm<br>தகைமை/தொழில்: Master Degree (சுவிடன்)<br>தொ.இ: B/12165 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1 ஆம் பாதம்<br>கி.பா: செவ் 3 சூரி 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:சட்டத்தரணி<br>எதிர்பார்ப்பு:லண்டன் அவுஸ்ரேலியா அமெரிக்கா கனடாமற்றும் உள்நாடு<br>தொ.இ:G/12191 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 32 செவ் 7 சூரி 8 இல்<br>உயரம்: 172 cm<br>தகைமை/தொழில்:O/L (பிரான்ஸ்)<br>எழுத்துடன் திருமணம் குழம்பியது<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12166 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3 ஆம் பாதம்<br>கி.பா: 38 செவ் 7சூரி 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: ரைப்பிங் A/L<br>தொ.இ:G/12192 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

# மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடில்லை

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க இந்த விடயத்தை தெரிவித்தார்.

நபர் ஒருவருக்கு ஐந்து லீற்றர் மண்ணெண்ணெய் விற்பனை செய்யும் நடைமுறையானது புதிதாக அறிமுகம் செய்யப்பட்டதல்ல எனவும் மிக நீண்ட நாட்களாக ஐந்து லீற்றர் வரையறை நாட்டில் அமுலில் உள்ளது. அதிகளவில் களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்வதனை தவிர்க்கும் நோக்கிலேயே இவ்வாறு ஐந்து லீற்றர் என்ற வரையறை காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு கொள்கலன் தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், மண்ணெண்ணெய் பயன்பாட்டுக்கும் வரையறைகள் விதிக்கப்படுவது குறித்து மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (நி)

# வரவு-செலவுத்திட்டத்தை ஆதரிப்பதா? இல்லையா?

## அடுத்த வாரம் மைத்திரி தரப்பு தீர்மானம்

(கொழும்பு)

வரவு- செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு வாக்கெடுப்புக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்குமா? இல்லையா? என்பது குறித்து அடுத்தவாரம் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

ஆளும் தரப்புடனான முறுகல் அதிகரித்து வரும் நிலையில் முன்னாள் ஜனாதிபதி



மைத்திரி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

இதற்கமைய முக்கியமான தருணத்தில் உரிய தீர்மானங்களை எடுக்கவுள்ளதாக பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

# சட்டவிரோதமான சொத்துக்கள் அரசுடைமையாக்கப்படும்

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல் மூலம்சட்டவிரோதமான முறையில் கொள்வனவு செய்த சொத்துக்களை பறிமுதல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் 218 பேரின் தகவல்களை, போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, சட்டவிரோத சொத்துக்கள் அல்லது சொத்து விசாரணைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் விற்பனை மூலம் சேகரிக்கப்பட்ட பணத்தை பயன்படுத்தி நிலம், வாகனங்கள், தங்கம் போன்றவற்றில் முதலீடு செய்ய பயன் படுத்தப்பட்டதுடன், சட்டவிரோத சொத்துக்களை பணமோசடி சட்டத்தின் கீழ் கைப்பற்றும் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறு போதைப்பொருள் விற்பனை மூலம் பெற்ற பணம் மற்றும் சொத்துக்களை குவித்த தெமட்டகொடை ருவனுக்கு சொந்தமான பணம், தங்கம், மற்றும் 8 வாகனங்கள் என சட்டவிரோத சொத்துக்கள் அரசாங்கத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சிற்றூர்தியை மோதித்தள்ளிய தொடரூந்து - ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

அம்பலாங்கொட - கந்தேகொட பகுதியில் தொடரூந்து கடவையில் சிற்றூர்ந்து ஒன்று தொடரூந்தால் மோதப்பட்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுக் காலை 7 மணியளவில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

தொடரூந்து கடவையில் சமிக்ஞை விளக்கு ஒளிர்ந்த போதிலும், அதனை பொருட்படுத்தாமல் சாரதி சிற்றூர்ந்தை செலுத்தியதால் இந்த



விபத்து சம்பவித்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த சிற்றூர்ந்தின் சாரதி சிகிச்சைகளுக்காக பலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## உள்ளமும் உள்ளதும்

பெரும்பாலானவர்களின் உள்ளங்களில் குறை என்னும் கொடு நாகம் குடியேறி அவர்களைக் கொத்திக் கொத்தி மெல்ல சாகடித்துக் கொண்டே இருக்கும்.

உடலின் ஒரு பகுதி ஊனமாக இருக்கிறதே என்ற குறை தனக்குக் குழந்தை இல்லையே என்கிற குறை, வசதியாக வாழ முடியவில்லையே என்கிற குறை, இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

தாங்களாக எதையும் எண்ணி வருத்தப்படாவிட்டாலும் இவர்களின் மனப்புண்ணைப் பதம் பார்க்க இந்தச் சமுதாயத்தில் ஏராளமான வேல்கள் உள்ளன.

அவர்கள் உள்ளதைத்தானே சொல்கிறார்கள் என்பதாக எண்ணும் மனப்பக்குவத்தை விரைவில் வளர்த்துக் கொண்டு விட வேண்டும். அத்தகைய மனப்பக்குவம்தான் வேல்களைத் தாங்கும் கேடயமாக அமையும்.

இத்தகையவர்கள் மன நிம்மதி பெற இரண்டே வழிகள் தாம் உள்ளன.

ஒன்று அக்குறை நீங்கச் சாத்தியக்கூறுகள் எவையேனும் இருப்பின் அவற்றை முழு முயற்சியுடன் மேற்கொள்வது, இரண்டாவது மாற்ற முடியாத, வழி காண முடியாத குறையெனின் இது இயற்கையின் விதியென, நியதியென எண்ணி அதைச் சரியென ஏற்றுப் பொறுத்துக் கொள்ளவும் சகித்துக்கொள்ளவும் முன்வருவது.

நிரந்தரக்குறையை நினைத்து வருந்துவது, குழப்பமடைவது ஆகியவற்றால் என்ன பலன் விளையப்போகிறது? ஒன்று கூட இல்லை.

வலக்கை வாதத்தால் விழுந்து விட்டால் அவரது இடக்கை இருமடங்கு பலமுடையதாய் ஆகி விடுகிறது. ஒன்றும் கேட்காவிட்டாலும் வாய் உச்சரிப்பை வைத்தே பேசியவற்றைப் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் இருக்கிறது.

ஆக ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

அதாவது உடல் உறுப்புக்களின் ஆற்றலானது ஒன்றின் இழப்பை இன்னொன்று ஈடுகட்டுவதாக உள்ளது.

அதேபோலத்தான் மனமும், உடல் குறையாயினும் உலக வாழ்க்கையில் ஏற்படும் குறையாயினும் அதைப் பழக்கப்படுத்திக் கொண்டு தாங்கிக் கொள்ளக்கூடிய பலம் மனதிற்கு இருக்கிறது.

அதுமட்டுமல்ல இக்குறைகளோடு மகிழ்ச்சியுடன் வாழ முடியும். இதற்குச் சற்று அறிவுபூர்வமான கண்ணோட்டம் தேவை.

விரும்பியது கிடைக்கவில்லையா? கிடைத்ததை விரும்புவோம்!

நினைத்தபடி நடக்கவில்லையா? நடப்பதை நினைப்போம்!

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## உலகத்தின் மையப்பகுதி எது?

பேரரசரைப் பணிவாக வணங்கி, "தங்கள் கேள்விக்குப் பதில் சொல்லிப் பரிசு பெற வந்துள்ளேன்," என்றான்.


"உலகத்தின் மையப் புள்ளி எங்கே உள்ளது?" என்று கேட்டார் அரசர்.

"பேரரசே! என் கழுதையின் இடது முன்னங்கால் இப்போது எங்கே பதிந்து உள்ளது? அங்கேதான் உலகத்தின் மையப் புள்ளி உள்ளது.

நான் உலகத்தை அளந்து பார்த்துவிட்டு வந்து தான் சொல்கிறேன். உங்களுக்கு ஐயம் இருந்தால், நீங்கள் உலகத்தின் நீள அகலத்தை அளந்து பாருங்கள்.

இதே இடம் தான் உலகத்தின் மையப் புள்ளி என்பது உங்களுக்கே தெரியும்" என்றான் வினு.

"ம்...ம்...ம்... அப்படியா? உன்னை இன்னொரு கேள்வி கேட்கிறேன். வானத்தில் எத்தனை விண்மீன்கள் உள்ளன? சரியான எண்ணிக்கையைச் சொல்ல வேண்டும். எண்ணிக்கை குறையவும் கூடாது. அதிகமாகவும் கூடாது" என்றார்.



"பேரரசே! என் கழுதையின் உடம்பில் எத்தனை முடி உள்ளதோ, அத்தனை விண் மீன்கள் வானத்தில் உள்ளன!" "முட்டாள் தனமாகப் பேசாதே!" "பேரரசே! நான் சொல்வதில் உங்களுக்கு ஐயம் இருந்தால், ஆட்களை வைத்து எண்ணுங்கள். இரண்டும் சரியாக இருக்கும். என் கணக்கில் தவறு இருந்தால், உயிரை விடத் தயாராக இருக்கிறேன்" என்றான் வினு.

கோபத்தில் பற்களை நறநற வென்று கடித்தார் அரசர். என்ன செய்வார் அவர். கடுகடுத்த முகத்துடன் அவனுக்குப் பத்தாயிரம் பொன்னைப் பரிசாகத் தந்தார்.

பத்தாயிரம் பொன்னை வாங்கிக் கொண்டு சந்தோஷமாக வீட்டுக்குச் சென்றான் வினு.

(முற்றும்)

# மகாபாரதம்

258

அதற்கு "யாதுதானி" எனப் பெயர் வைத்தான். சப்த ரிஷிகளையும், அருந்ததியையும், வேலைக்காரர்களையும் நீ அழித்து விடு. அவர்கள் பெயர்களை நினைவில் வைத்துக் கொள்.

கவனம் இருக்கட்டும் என ஆணையிட்டான். ஆணைப்படி அந்தப் பேய் அவர்கள் இருக்குமிடம் நாடிச் சென்றது.



அத்ரி மகரிஷி

அப்போது அந்த ரிஷிகள் காட்டில் காய் கனிகளை உண்டு சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

ஒருநாள் அவர்கள் கை, கால், முகம், வயிறு ஆகிய இவை பருத்த சரீரம் உடைய "சுனஸ்ஸகன்" என்ற பெயருடைய துறவியைக் கண்டனர்.

அப்போது அருந்ததி ரிஷிகளைப் பார்த்து "நீங்கள் இந்தத் துறவியைப் போல தேஜஸ் உடையவர்களாக இல்லையே ஏன்" என்றாள்.

"இவனுக்கு நம்மைப் போல சாஸ்திரப் பயிற்சி இல்லை. இவனுக்குப் பசி தீர்ப்பது ஒன்றே குறிக்கோள். இவன் கஷ்டப்பட்டு எதுவும் செய்வதில்லை.

ஆகமப் பயிற்சியிலும் ஈடுபடுவதில்லை. அதனால் மூர்க்கன். சோம்பேறி. இருக்கும் இடத்தைவிட்டு எங்கும் நகர்வது இல்லை. அதனால் உடல் பருத்து இருக்கிறான்" என பதில் உரைத்தனர்.

ஆனால் சுனஸ்ஸகனோ பதில் ஒன்றும் சொல்லாது, அந்த ரிஷிகளைத் தாழ்ந்து வணங்கிப் பணிவிடைகள் செய்தான். ஒருநாள் ரிஷிகள் காட்டில் மரங்கள் அடர்ந்து நிழல் செய்யும் பெரிய குளத்தைக் கண்டனர்.

அந்தக் குளம் யாவராலும் மாசுபடாத நீரைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. அதில் தாமரை மலர்கள் அழகாக மலர்ந்திருந்தன.

சேறில்லாது பளிங்கு போல விளங்கும் தூய நீரைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் அக்குளத்தை, விருஷாதர்ப்பி மன்னன் ஏவிய யாதுதானி என்னும் கொடிய பேய் காவல் காத்து வந்தது.

ரிஷிகள் தாமரைக் கிழங்குக்காக சுனஸ்ஸகனோடு அக்குளத்தை அடைந்தனர். பேயைக் கண்டு வியந்தனர்.

"நீ யார்? யாருக்காக இங்கு காத்துக் கொண்டிருக்கிறாய்? என்ன செய்ய நினைக்கிறாய்? என்று வினவினர்.

நான் யாராயிருந்தால் உங்களுக்கென்ன பொருளற்ற வினாக்களை வினவ வேண்டாம். இக்குளத்தைக் காவல் காக்கிறேன்.. இந்த விடை உங்களுக்குப் போதும் என நினைக்கிறேன் என்றது பேய்.

ரிஷிகள் ஒன்றாக "நாங்கள் பசியோடு இருக்கிறோம். அதனால் நாங்கள் தாமரைக் கிழங்குகளைப் பறித்து உண்ண அனுமதி தர வேண்டும்" என்றனர்.

ஒரு நிபந்தனைக்கு உட்பட்டால், தாமரைக் கிழங்குகளை எடுத்துக் கொள்ள அனுமதி தருகிறேன் உங்கள் பெயரை ஒவ்வொருவராக எனக்குச் சொல்ல வேண்டும் என்பதே அந்த நிபந்தனை என்றாள் யாதுதானி.

ரிஷிகள் ஒவ்வொருவராக பெயரைக் கூறினர்.

முதலில் அத்ரி மகரிஷி "நான் ஒவ்வொரு இரவிலும் மூன்று முறை அத்யயனம் செய்கிறேன். அதனால் அராத்ரி என்னும் என் பெயர் அத்ரி ஆயிற்று" என்றார்.

(தொடரும்)

தீபம் அதன் அடிப்புறத்திற்கு ஒளி தருவதில்லை.
– துருக்கியப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அறிஞர்கள் மிகுந்த சபையில் திரௌபதி உரைத்த சட்டம்

சூழ்ச்சிக்காரச் சகுனியால் தருமபிரான் சூதாட்டத்தில் தோல்வியுற்றார்.

உடைமையெல்லாவற்றையும் தோற்றுப் போன தர்மர், தன் சகோதரர்களை சூதில் இழந்துபோய் தன்னையும் பந்தயப் பொருளாய் சூதாட்டத்தில் வைத்து அஃதும் தோல்வியாய் முடிந்து போயிற்று.

ஈற்றில் மனையாள் திரௌபதியை சூதில் வைக்கிறார். என்னே கொடுமை! திரௌபதியையும் இழந்தார் தர்மர்.

நிலைமை இவ்வாறாக முடிந்துபோக, கௌரவர் சபை கூடுகிறது. வீஷ்மர், துரோணர், விதுரர் உள்ளிட்ட ஆன்றறிந்த அறிஞர் பெருமக்கள் அச்சபையில் கூடியுள்ளனர்.

சூதாட்டத்தில் தோல்வியுற்ற பஞ்சபாண்டவர்கள் பேசும் உரிமை இழந்தவர்களாய் அடிமைபோலக் கைகட்டி வாய்பொத்தி நிற்கின்றனர்.

அந்நேரத்தில் திரௌபதியை சபைக்கு அழைத்து வருமாறு துரியோதனன் கட்டளையிடுகின்றான்.

துரியோதனன் கட்டளை பிறப்பித்ததும் சபை நடுங்கிற்று.

ஐயகோ! கற்புடைத் தாயவளை இச்சபைதனில் அழைப்பது முறையன்று. முறைதவறிய இச்சபைக்குக் கேடு வந்துற்றது என அறம் உணர்ந்தவர்கள் மனம் பதறினர்.

தருமபிரான் ஆடிய சூதாட்டத்தில் திரௌபதியை இழந்த செய்தி அவளுக்குத் தெரியப்படுத்தப்பட்டு, சபைக்கு அழைத்து வரப்படுகிறாள்.

நடந்த அனைத்தையும் அறிந்த திரௌபதி அச்சபைதனில் நின்று; **என்னைத் தோற்றபின் தன்னைத் தோற்றாரா? தன்னைத் தோற்றபின் என்னைத் தோற்றாரா?** எனக் கேள்வி எழுப்பி;

தன்னைத் தோற்றபின் என்னைச் சூதாட்டத்தில் வைப்பதற்கும் என்னைத் தோற்பதற்கும் தருமருக்கு உரிமையில்லை என்ற சட்ட வாதத்தை முன்வைக்கிறார்.

திரௌபதி முன்வைத்த சட்டத்தில் நுணுக்கமான நியாயம் இருப்பதை சபை உணர்ந்து கொண்டாலும் சபையின் தலைவன் துரியோதனன் என்பதால், திரௌபதி உரைத்த சட்டவலிமை செல்லுபடியற்றதாயிற்று.

இக்கதையை மாணவப் பருவத்தில் அறிந்திருந்தாலும் இப்போது அது மீண்டும் நினைவுக்கு வருகிறது.

ஆம், மாவீரர்களை நினைவேந்துவது அடிப்படை உரிமை. அதனைத் தடை செய்ய முடியாது என நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கிய பின்னர், நினைவேந்தலுக்குச் சென்றவர்களை இராணுவத்தினர் அச்சுறுத்தியும் அதட்டியும் தடுத்தும் உள்ளனர்.

உண்மையில் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் நினைவேந்துவது எங்கள் உரிமை.

எனவே அந்த உரிமையைப் படையினர் தடுத்தனர் என்றால், நீதிமன்றத்தின் உத்தரவுக்குக் குந்தகம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் சம்பந்தப்பட்ட படையினரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் நிறுத்த வேண்டும்.

இதுவே சட்டத்தின் தாற்பரியம். ஆனாலும் அப்படி ஏதும் நடக்கவில்லை எனும்போது நீதி பரிபாலனம் நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என நம்பலாம்.

# நாவலரின் பெருமையை காப்பதற்கு என்றுமே பின்நிற்கப்போவதில்லை

## யாழ். மாநகர ஆணையாளர் உறுதி

(குப்பிழான்)

நாவலர் கலாசார மண்டபம் யாழ்.மாநகர சபையின் பொறுப்பில் உள்ளது. நாவலரின் பெருமை பேசுகின்ற இந்த மண்டபத்தை மேலும் சிறந்த முறையில் சீரமைப்பதற்கு மாநகர சபையின் முதல்வர் தலைமையில் பல முயற்சிகளை யாழ். மாநகர சபை எடுத்திருக்கின்றது.

அதுமாத்திரமல்லாமல் தொடர்ந்தும் எடுக்கவிருக்கின்றது. நாங்கள் நாவலரின் பெருமையைக் காப்பதற்கு என்றுமே பின்நிற்கப்போவதில்லை என யாழ். மாநகர சபையின் ஆணையாளர் த.ஜெயசீலன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் "நாவலர் நினைவரங்கம்" சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை நன்னாளான கடந்த சனிக்கிழமை (27.11.2021) யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் நாவலர் கலாசார மண்டபத்தை நிர்வகிப்பதில் சில குறைபாடுகள் இருந்தாலும் சைவத்தினதும் தமிழினுடையதும் மேன்மைக்காக நாங்கள் இந்த மண்டபத்தை முழுமையாகப் பயன்படுத்தியிருக்கின்றோம் என்ற செய்தியை நான் இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். சுமார் 29 வருடங்களாக சைவத்தின் பெருமையைக் காத்து வளர்த்த யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின் "நல்லைக் குமரன்" நூல் வெளியீடு இங்கு நடைபெற்றிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் கடந்த 15 வருடங்களாக எங்கள் மண்ணில் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய பெருந்தகைகளுக்கு இந்த மண்டபத்தில் வைத்து "யாழ். விருது" கொடுத்துக் கௌரவித்து வருகின்றோம் என்றார்.

(ஞா-18,33,104)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**"அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது, நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள்தான். தன்னை வெட்டு பவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக்காப்பதும் மரங்களே!"**

**-கௌதம புத்தர்**

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கருநாட்டுக்கேணி சந்தி, கொக்கிளாய் மருத்துவமனை, கொக்குத்தொடுவாய்மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு (15ஆவது மைல் கல்லடி), பரராஜசிங்கம் தோட்டம், புளியமனை சந்தி ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மடு, அரசடிக்குளம், செட்டிக்குளம், செட்டிக்குளம் பிரதேச செயலக அலுவலகம், கங்கன்குளம், கண்ணாட்டி- கணேசபுரம், கந்தசாமி நகர், காந்தி நகர், குருக்களூர் மன்னார் வீதி, குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், மடு தேவாலயம் (நீர் வழங்கல் சபைக்கு அருகில்), மடுகுளம், மணியர்குளம் (வீட்டுத்திட்டம்) நீலிய மோட்டை, நித்திக்குளம் (செட்டிகுளம்), நித்திய நகர், பாலம்பிட்டி, பாலம்பிட்டி மொபிட்டல் கோபுரம், பறயனாளங்குளம் குருக்களூர், பெரியகாடு, பெரியகுளம் காந்திநகர், பெரிய பண்டிவிரிச்சான், பெரிய பண்டிவிரிச்சான் கிழக்கு, பெரியதம்பனை, பிரமணாளங்குளம், பூவரசங்குளம், புலவனூர், புளியடிமுறிப்பு, புளியங்குளம், ரங்கீத்கம, சாளம்பைக்குளம், சாளம்பைக்குளம் வீட்டுத்திட்டம், சங்கராபுரம், சண்முகபுரம், செங்கற்படை, சின்னபண்டிவிரிச்சான், சின்னத்தம்பன்னை (மடுகுளம்), சோபாலா புளியங்குளம், தட்டாங்குளம், தட்சணாமருதமடு, தாலிக்குளம், தட்சணாமருதமடு நீர்வழங்கல், வலைத்தோட்டம், பெரிய தம்பனை, வாரிக்குட்டியூர், வேளாங்குளம், விமானப் படைமுகாம் வேளாங்குளம், செட்டிகுளம் மருத்துவமனை, செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், செட்டிகுளம் ரெலிகொம் ரிப்பீட்டர், மடு தேவாலய நீர் வழங்கல், ரோட்மண்ட் எலக்ட்ரோ எலக்ரிக்கல், வைரவப் புளியங்குளம், செக் கட்டிப் புலவு வீட்டுத்திட்டம், கற்பகபுரம், நெளுக்குளம் சந்தி, பம்பைமடு, பம்பைமடு சந்தி, பெரியகாடு, புளிதறித்த புளியங்குளம் வீட்டுத்திட்டம், புளிதறித்த புளியங்குளம் பழைய கிராமம், புதிய கோவில்குளம், சாளம்பை புதிய வீட்டுத்திட்டம், சாளம்பைக்குளம், பல்கலைக் கழக வளாகம், சாம்பல் தோட்டம், பம்பைமடு பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா பல்கலைக்கழகம், வவுனியா வளாகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## திருத்தமும் வருத்தமும்



❖ பிறரிடம் உள்ள குறைகளுக்கு முழுக்க முழுக்க அவர்களே தான் காரணம் என்றாலும் கூட, அந்தக் குறைதான் நம் சினத்திற்கும் காரணம் என்றாலும் கூட, சினத்தினால் அவர்களை இதுவரை எவ்வளவு திருத்தியிருக்கிறோம் என்று பார்த்தால் ஓர் அங்குலம் கூட இருக்காது. அல்லது ஒரு வேளை அவர்கள் நமக்குப் பயந்து கொண்டிருக்கலாம். ஆனால், திருந்தி இருக்க மாட்டார்கள்.

❖ "நானும் முதலில் கோபம் கொண்டதில்லை. தவறு செய்யும் பொது நல்லவிதமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால், அந்த முறை சரிப்பட்டு வரவில்லையே! இனி, கோபமும் கூடாதென்றால் அவர்களை எப்படித் தான் திருத்துவது?" என்று ஒருவர் கேட்பதாக வைத்துக் கொள்வோம். அவருக்குச் சொல்வதெல்லாம் சினத்தினால் திருத்தம் வரவே வராது. சினத்தினால் ஏதாவது வரும் என்றால் அது வருத்தமாகத் தான் இருக்கும். மாறாக, அன்பாய் முறையோடு பலமுறை கனிவாகக் கூறினோம் என்றால் அவர்கள் திருந்தவும் வழியிருக்கிறது.

❖ முக்கியமாக, அவர்கள் மனம் புண்படும்படியாகக் கூறக்கூடாது. தவறு செய்யப்பட்ட கையோடு புத்தி சொல்லக் கூடாது. குத்திக் காட்டுவது போல் அறிவுரை இருக்கக் கூடாது. "அப்படிச் செய்ததை இப்படிச் செய்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் இனிமேல் இந்தக் காரியத்தை இந்த விதமாகவே செய்து நன்மை அனுபவிப்போம்" என்ற விதமாகத் தான் அறிவுரை இருக்க வேண்டும். கூடவே, உங்கள் தவங்களில் அவர்கள் திருத்தத்திற்கான வாழ்த்தையும், சங்கற்பத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

❖ இந்த முறையில் சிறிது கால நீடிப்பு ஏற்பட்டாலும் நிச்சயமாக வெற்றி கிடைக்கும். பலர் ஏற்கனவே இம்முறையால் வெற்றி கண்டாயிற்று. எனவே, பிறரைத் திருத்துவது எப்படி என்பது இங்கு முக்கியமில்லை. நமது திருத்தந்தான் முக்கியம்.

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

24



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

உரோமை எண்ணுருக்கள் பின்வரும் ஏழு அடிப்படைக் குறியீடு களைக் கொண்டுள்ளன. இவை படம் (ஆ) இல் காட்டப்பட்டுள்ளன. இவை இன்றும் பொதுவாகப் பயன் படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக கடிகாரங்கள் மற்றும் புத்தகங்களில் சில பக்கங்களை இலக்கமிட, மன் னர்களின் வழித்தோன்றல்களின் பெயர்களில் பயன்படுத்தப்படுகின்றன.

| படம் (ஆ) ரோமன் எண் அதற்கான இந்து- அரபு எண் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ரோமன் எண் | I | V | X | L | C | D | M |
| இந்து - அரபு எண் | 1 | 5 | 10 | 50 | 100 | 500 | 1000 |

பெரிய எண்களை உரோம எண்ணுருக்களில் எழுதுவதற்குச் சரியான முறை, முதலில் ஆயிரத்தி லிருந்து தொடங்கி, நூறு, ஐம்பது, பத்து என எழுதுவதேயாகும்.

குறியீடுகள் (symbols) இடமி ருந்து வலமாக மதிப்பில் குறைந்து விட்டால், பின்னர் உரோமானிய இலக்கத்தின் மதிப்பைப் பெற அவற்றின் மதிப்புகளைச் சேர்க்க மொத்தமாக எண் வரும். எடுத் துக்காட்டாக XV என்றால் (X+V = 10+5=15).

எடுத்துக்காட்டாக ரோமன் எண் CLXVII என்பதை இந்து- அரபு எண்ணுக்கு மாற்றின்

(1) CLXVII = 100+50+10+ 5+1+1= 167.
(2) MCMXCVI = 1000+ (1000-100) +(100-10) +5+1 = 1996
(3) 1988 = MCMLXXXVIII.

உரோமன் எண்கள் எழுதுவதற் கான விதிமுறைகள் கீழே காண் போம்.

தற்போதும் பாடசாலை பாடத்திட் டத்தில் உரோமன் எண்கள் இருப் பதால், அவ்வெண்கள் பற்றி மேலும் சில விதிமுறைகளைப் பார்ப்போம்.

விதி 1:- ஓர் எண்ணில், ஒரே மதிப்புள்ள எண்ணுருக்கள் கூட்ட வேண்டும். அவை I,X,C,M என்ற நான்கு எண்ணுருக்கள் மட்டும் தான். இந்த குறீயீடுகள் ஓர் எண் ணில் மூன்று முறைகளுக்கு மேல் திரும்ப வரக் கூடாது.

எடுத்துக் காட்டுகள்:- II = 2, III = 3, XX =20, XXX = 30, CC = 200, CCC = 300, MM = 2000, MMM = 3000. நான்கு என்ற எண்ணை IIII என எழுதக் கூடாது. அதை IV என எழுத வேண்டும். இதேபோல் 40 = XXXX என் எழு தக்கூடாது. அதை XL என எழுத வேண்டும், இதேபோல் 400 =CC CC என எழுதக் கூடாது. அதை CD என எழுத வேண்டும்.

விதி 2:- ஓர் எண்ணில், உரோ மன் எண்ணுருக்கள் V,L,D ஆகி யவை திரும்ப வரக் கூடாது.

விதி 3:-கூட்டல் விதி:- ஓர் எண்ணில், ஒரு பெரிய எண்ணு ருக்கு வலது புறத்தில் சிறிய எண் ணுருக்கள் இருந்தால், சிறிய எண் ணுருக்களை, பெரிய எண்ணுரு உடன் கூட்ட வேண்டும். எடுத்துக் காட்டுகள்:-

VIII=5+1+1+1=8; XV=10+ 5=15; LXX=50+10+10=70; CX=100+10=110; DC= 500+ 100=600; MD=1000+500= 1500.

விதி 4:- கழித்தல் விதி:- ஓர் எண்ணில், ஒரு பெரிய எண்ணு ருவிற்கு இடதுபுறம் சிறிய எண்ணுரு இருந்தால், சிறிய எண்ணுருவை பெரிய எண்ணுருவிலிருந்து கழிக்க வேண்டும். எடுத்துக் காட்டுகள்:- IX = 10–1= 9; XL=50–10=40;XC= 100--10=90;CD=500--100= 400;CM=1000--100=900.

**படம் ஆ(1) உரோமன் இலக்க பெரிய எண்களின் பெறுமானம் காணல்**

$\overline{IV} = 4x\ 1000 = 4,000$

$\overline{IV}DCXXVII = 4000+500+100+20+7=4627$

$\overline{XXV} = 25x1000 = 25,000$

$\overline{XXV}CDLIX = 25,000+400+50+9 = 25,459$

விதி 5:- உரோமன் எண்ணுருக் கள் V, L,D எப்பொழுதும் கழிக்கக் கூடாது.

- உரோமன் எண்ணுருக்கள் V மற்றும் X லிருந்து ஐ என்ற எண்ணுருவை ஒரு முறை மட்டும் கழிக்க வேண்டும்.
- உரோமன் எண்ணுருக்கள் L மற்றும் C லிருந்து X என்ற எண்ணுருவை ஒரு முறை மட்டும் கழிக்க வேண்டும்.
- உரோமன் எண்ணுருக்கள் D மற்றும் M லிருந்து C என்ற எண்ணுருவை ஒரு முறை மட்டும் கழிக்க வேண்டும்

உரோமன் எண்ணுருவின் குறி யீட்டில் குறிப்பிடக்கூடிய மிகப் பெரிய எண் 3,999 ஆகும். அதாவது (MMMCMXCIX), அதற்கு மேற் பட்ட எண்களிற்கு அதன் மேல் குறியிடுவதன் மூலம் வரும் இலக் கம் குறியிடாத இலக்கத்தின் ஆயி ரம் மடங்காகும். இதுபற்றி படம் ஆ(1) வில் பார்க்கவும்.

**கிரேக்க எண்கள் (Greek Numerals) (கி.மு.700 ஆண்டு கள்).**

கிரேக்க நாகரிகம் கி.மு. 2000 இல் தொடங்கியிருந்தாலும், கிரேக்க கணிதம் கி.மு. 700 இல் தொடங் கியது, இரு காலங்களாக பிரிக்கப்பட லாம், கி.மு. 700 - 300 பாரம்பரிய காலம் மற்றும் கி.மு. 300 முதல் கி.பி.400 வரை ஹெலனிஸ்டிக் (Hellenistic) காலம் ஆகும். அவர் கள் பாபிலோனியர்களைப் போன்று களிமண்ணில் குறியீடுகளைத் தயாரித்தனர். அதன்பின் புல் தாள்க ளிலும் (Paprus) மரப் பலகைக ளில் எழுதவும் தொடங்கினர்.

ஆரம்பத்தில் அவர்கள் பயுன் படுத்திய எண் முறைமை அட்டிக் எண் முறைமையாகும். அட்டிக் எண் முறைமை பற்றி முன்னர் பார்த்தோம். ஆரம்பத்தில் அவர்கள் பயன்படுத்திய அட்டிக் எண் முறைமை, அயனி கிரேக்க எண் முறையால் மாற்றீடு செய்யப்பட்டது.

**அயனி கிரேக்க எண் முறை**

அயனி எண் முறையானது அலெக்ஸாண்ட்ரியன் எண் முறை என்றும் அழைக்கப்படுகிறது. இம் முறைமை கி.மு.100 இலிருந்து கி.பி. 50 வரை, கிரேக்க-ரோமா னிய காலங்களில் பிரபலமடைந் திருந்தது. ஐரோப்பாவில் பத்தாம் நூற்றாண்டு வரை அயனி எண் கள் பயன்படுத்தப்பட்டன, அதன் பின்னர் அவை ரோமானிய எண்க ளால் மாற்றீடு செய்யப்பட்டன.

**அயனி கிரேக்க எண் முறையால் மாற்றீடு செய்யப் பட்டது. அயனி கிரேக்க எண் முறைமை கிரேக்க எழுத்து க்களில் உள்ள 24 எழுத்துக் களையும், மற்ற மூன்று குறி யீடுகளையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது.**

இந்த எண் முறைமை கிரேக்க எழுத்துக்களில் உள்ள 24 எழுத் துக்களையும் மற்ற மூன்று குறியீடு களையும் பயன்படுத்தி உருவாக்கப் பட்டது:

அம்மூன்று குறியீடுகளும் 6 ஐக் குறிக்கும் திகம்மா, 90 ஐக் குறிக்கும் கொப்பா மற்றும் 900 ஐக் குறிக்கும் சம்பி ஆகும். முதல் ஒன்பது எழுத்துக்கள் 1 முதல் 9 வரை எண்களைக் குறிக்கின்றன. இரண்டாவது ஒன்பது எழுத்துக்கள் 10 முதல் 90 வரையிலான 10 இன் பெருக்கங்களைக் குறிக்கிறது.

மூன்றாவது ஒன்பது எழுத்துக் கள் 100 முதல் 900 வரையிலான 100 இன் பெருக்கங்களைக் குறிக்கி றது. ஆயிரங்களைக் குறிக்க, 1 முதல் 9 வரையிலான எழுத்துக்க ளில் ஒரு குறி (,) பயன்படுத்தப்பட் டது. எடுத்துக்காட்டாக, α என்பது 1 ஐ குறிக்கிறது., α என்பது 1000 ஐ குறிக்கிறது. இந்த எண் முறை மையை உரு 18 இல் பார்க்கவும். உரு -18Aயில் சில உதாரணங் கள் தரப்பட்டுள்ளன.

உரு 18 அயனி கிரேக்க எண் முறை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| α | β | γ | δ | ε | F | ζ | η | θ |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| ι | κ | λ | μ | ν | ξ | ο | π | ϟ |
| 10 | 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 | 90 |
| ϱ | σ | τ | υ | φ | χ | ψ | ω | ϡ |
| 100 | 200 | 300 | 400 | 500 | 600 | 700 | 800 | 900 |
| .α | .β | .γ | .δ | .ε | .F | .ζ | .η | .θ |
| 1000 | 2000 | 3000 | 4000 | 5000 | 6000 | 7000 | 8000 | 9000 |

(தொடரும்)

## 3 இராணுவத்...

திரன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், இராணுவ வீரர்கள் மூவர் முல்லைத்தீவு பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை கண்டித்து, நேற்று முல்லைத்தீவில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இராணுவத்தினர் மூவருக்கும் நேற்று பிற்பகல் பிணை வழங்கப்பட்டுள்ளது. (ஜூ)

## தமிழரின் உரிமை...

அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும் என்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொதுச் செயலாளர் காலித் கியாரி வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான திணைக்களத்தின் மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொதுச்செயலாளர் காலித் கியாரி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை நாட்டிற்கு வருகைதந்திருந்ததுடன், இலங்கையில் அவரது பணிகள் கடந்த வியாழக்கிழமையுடன் முடிவிற்கு வந்தன.

இலங்கையில் தங்கியிருந்த காலப் பகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, நீதியமைச்சர் அலி சப்ரி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் காலித் கியாரி சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார். (ஜூ)


தன நிதானய
திகதி - 2021.11.28
சீட்டிழுப்பு இலக்கம் - 630
Z 10 44 50 61
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 28.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2895
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 02 04 38 51
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/11/28
சீட்டிழுப்பு இலக்கம் 4600
ஆங்கில எழுத்து A | வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 0 0 1 4 4
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/11/28 | 1639 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 11 | வெற்றி இலக்கங்கள் 06 08 21 25
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

மெகா பவர்
திகதி 28/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0948
வெற்றி எழுத்து O | சுப்பர் இலக்கம் 07 | வெற்றி இலக்கங்கள் 19 28 58 71


## கோதுமை மா...

கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கமைய, 450 கிராம் நிறைகொண்ட ஒரு இறாத்தல் பாணின் விலையை 10 ரூபாயினால் அதிகரிக்கவுள்ளதாக சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இவ்வாறு பாணின் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 17 ரூபாயினால் அதிகரிக்கப்படுவதாக புறக்கோட்டை மொத்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் நேற்று முன்தினம் அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து, கொத்துரொட்டி விலையை 10 ரூபாயினாலும் சிறிய உணவுகளுக்கான விலையை 5 ரூபாயினாலும் இன்று முதல் அதிகரிக்கவும் சிற்றுண்டி உரிமையாளர் சங்கம் ஏலவே தீர்மானித்துள்ளது. (ஜூ)

## ஆணின் சடலம்...

றுக்கிழமை காலை கரையொதுங்கியுள்ளது.

குறித்த சடலத்தை அடையாளம் காணும் முயற்சியிலும் மேலதிக நடவடிக்கைகளிலும் நெடுந்தீவுப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வடமராட்சி மணற்காடு, வல்வெட்டித்துறை கடற்கரைப் பகுதிகளில் இரு சடலங்கள் கரையொதுங்கி இருந்தன.

இந்நிலையில் இரு தினங்களில் மூன்று சடலங்கள் யாழ்.மாவட்டக் கடற்கரையோரங்களில் மீட்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஜூ-18,33,104)

## சிலிண்டர் அடுப்பு...

மேற்படி வீட்டில் எரிவாயு சிலிண்டர் சமையல் அறைக்கு வெளியே வைக்கப்பட்டிருந்தமையால் அடுப்பு வெடித்து தீ பிடித்த போது பெரும் அசம்பாவிதம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சி திருவையாறுப் பகுதியிலுள்ள வீடொன்றிலும் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியிருந்தது.

இதேவேளை, சமையல் எரிவாயு சிலிண்டர்களின் வெடிப்புச் சம்பவங்கள் அதிகரித்துவரும் நிலையில் தற்போது எரிவாயு அடுப்புக்களும் வெடித்துச் சிதறும் சம்பவங்களும் பதிவாகி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனுடன் சிலிண்டர் வெடிப்புத் தொடர்பாக எட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஜூ-18,33,104)

## ஒற்றையாட்சிக்...

கொள்வதற்கு தயாராக இல்லை என்று ஐக்கிய நாடுகள் உதவிப் பொதுச் செயலாளரிடம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை வலுவாக்கி சிங்கள, பௌத்த நாடாக இலங்கையை பிரகடனப்படுத்துவதற்கு முயல்வதாகவும் அதனை தடுப்பதற்கு சர்வதேசத்தின் முழுமையான அழுத்தம் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்திருந்த ஐ.நா உதவிப் பொதுச் செயலாளர் காலித் கியாரிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார், செயலாளர் கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

அத்துடன் இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் மற்றும் அரசியல் பிரிவைச் சேர்ந்த எட்வேர்ட் ரிஷ் மற்றும் ஜே.பெர்ணான்டோ ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ஜூ)

## 27 பேர்...

டுள்ளது.

இதனால் இலங்கையில் இதுவரையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14, 305 ஆக அதிகரித்துள்ளது. (ஜூ)

## தொடர் வாந்தி...

பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் மரணமாகியுள்ளார்.

இதில் கிளிநொச்சி உதயநகரைச் சேர்ந்த இரண்டு மாதக் குழந்தையின் தாயான நிறோ தர்சிகா (வயது-19) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மேற்படி குடும்பப் பெண் கடந்த 15ஆம் திகதியிலிருந்து வாந்தி மற்றும் தலைச் சுற்று என்பவற்றால் தொடர்ந்தும் அவதிப்பட்டு வந்தநிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அவர் மரணமாகியுள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ஜூ)

## மதம்...

இதனால் ஆத்திரமடைந்த வீட்டு உரிமையாளர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இதனையடுத்து பொலிஸார், மதமாற்றத்தில் ஈடுபட்ட மூவரையும் கைது செய்ததுடன் அவர்கள் மூவரையும் இன்று நீதி மன்றில் ஆஜர் செய்யவுள்ளனர். (ஜூ)

## மாதக...

றையை தினம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மாதகல் கிழக்கில் 3 பரப்பு காணி கடற்படையினரின் தேவைக்கு அபகரிப்பதற்காக அளவீட்டுப் பணிகள் இன்று திங்கட்கிழமை 9 மணிக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை மாதகல் மேற்கில் 16 ஏக்கர் காணி அளவீட்டுப் பணிகள் காலை 11 மணியளவில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முகமாக அனைத்து தரப்பினரையும் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஜூ-18,33,104)

## 12 வயது மகனை...

வருவதாவது,

குறித்த தாயாரின் கணவன் இரண்டு மாதங்களுக்கு முன்னர் காலமாகியுள்ளார். இந்நிலையில்நேற்று முன்தினம் இரவு தனது மகனை வீட்டில் இருக்கவேண்டாம் என அடித்து விரட்டியுள்ளார்.

இந்நிலையில் அச்சிறுவன் அன்று இரவு முழுவதும் வீதியிலேயே நின்றுள்ளான். அதன் பின்னர் நேற்றுக் காலை கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து குறித்த தாயாரை கொடிகாமம் பொலிஸார் நேற்று மதியம் கைது செய்ததுடன் மகனை பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

கடந்த 7ஆம் திகதியும் தாயார் இவ்வாறு தாக்கியதால் அச்சிறுவன் ஐந்து நாட்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரை இன்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஜூ-104)

## இடியுடன் கூடிய...

வாய்புள்ள காற்றமுக்கத் தாழ்வு மண்டலத்தினால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 3ஆம் திகதி வரை இடியுடன் கூடிய மழை தொடரும் என யாழ். பல்கலைக் கழக புவியியல்துறை பேராசிரியர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (ஜூ)


அத கோடிபதி
விருவம: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1403
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 28.11.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,222,400
வெற்றி இலக்கங்கள் 23 47 51 61 | ஆங்கில எழுத்து M
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
விருவம: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 9738
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 28.11.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,984,260
வெற்றி இலக்கங்கள் 07 11 22 44 | ஆங்கில எழுத்து O
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1577 | நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 28.11.2021 | தினம் ஞாயிறு
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் G 32 33 38 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் : 72,155,210/=
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,544,171/=
திகதி 28.11.2021
வெற்றி வாரம் 3289
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 09 19 22 33 | தனுசு
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,921,071/=

ஜய சட்டுவ வாரம் 771 | வர்ணம் மஞ்சள் | 28.11 2021 ஞாயிற்றுக்கிழமை
A 13 22 38 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,192,620
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (8818)



**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536



**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576 (C-3107)


# நாட்டில் மேலும் 742 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 742 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 562,520 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)


**மணமகள் தேவை**

யாழ்: இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 ஆம் ஆண்டு பிறந்த தனியார் துறையில் கடமையாற்றும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

021 221 5084
E-mail: kavisnam@gmail.com (8820)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் (8826)

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 (ஆகாஸ்)



**வேலையாட்கள் தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் குரு ஹாட்வெயார் நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- **ஹாட்வெயார் அனுபவம் உள்ளவர்கள்/ பழக விருப்பம் உள்ளவர்கள் தேவை.**
- **சீமெந்து விற்பனைப் பிரதிநிதிகள் - ஆண்கள்**
- **துப்புரவு (கிளீனர்ஸ்) வேலையாட்கள் - பெண்கள்**

தகுதியுடையோர் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும். சம்பளம் கவர்ச்சிகரமாக வழங்கப்படும். கிழமை நாட்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 04 மணிவரை. நேரில் சமுகம் தரவும். (C- 3082)

077 743 5265



# கேள்வி அறிவித்தல்

## கிளிநொச்சி மயான அபிவிருத்திக்குழு

## பொதுமக்கள் நிதி நன்கொடை வேலைத்திட்டம் - 2021

01. தலைவர், கிளிநொச்சி பொது மயான அபிவிருத்திக்குழு, திருநகர், கரைச்சிபிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிடப்பட்டவரால் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைக்காக கேள்வி கோரப்படுகிறது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் (National Competitive Bidding) நடைமுறைகளுக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. எனினும் covid 19 அனர்த்தகால வேலைத்திட்டம் இது என்பதனால், கிளிநொச்சி மாவட்டத்தில் தகைமை பெற்றுள்ளவருக்கு முன்னுரிமை வழங்குவதற்கான தீர்மான வகிபாகத்தை கேள்விச் சபையே கொண்டிருக்கும்.

04. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பொருத்தமான CIDA தரத்தில் கட்டடங்கள் அமைப்பதற்கான பதிவினை மேற்கொண்டுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகுதிகள் பற்றிய விபரங்கள் (Qualification Information) கேள்வி ஆவணத்தின் பிரிவு 04ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் பிரிவு 05ல் கேள்வித் தரவு (Bidding data) மற்றும் ஒப்பந்த தரவு (Contract data) ல் வழங்கப்பட்டுள்ளன.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், தலைவர், மயான அபிவிருத்திக்குழு, கரைச்சி பிரதேசசபை A9 வீதி, கிளிநொச்சி (தொலைபேசி இல: 021 228 5761) எனும் முகவரியில் எழுத்து மூலமான கோரிக்கையினைச் சமர்ப்பித்து காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியில் உள்ள முழுமையான கேள்வி ஆவணத்தை (Original & Duplicate), தலைவர், மயான அபிவிருத்திக்குழு கரைச்சிபிரதேச சபை A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் மீளளிக்கப்படாத •வைப்புத் தொகையாக ரூபா 3,000 காசாக செலுத்தி 01/12/2021 திகதியிலிருந்து 14/12/2021 வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 9.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

08. பூரணப்படுத்தப்பட்ட கேள்வி ஆவணம் (Original & Duplicate) 15/12/2021 அன்று காலை 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக தலைவர், மயான அபிவிருத்திக்குழு, கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். உறையின் (Envelop) இடது மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் வேலையின் விபரம் எழுதப்படவேண்டும். பிந்திய கேள்வி ஆவணங்கள் (Latebids) நிராகரிக்கப்படும். கலந்து கொள்ளக்கூடிய கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்வி ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலம் முடிவடைந்ததும் உடனடியாகத் திறக்கப்படும்.

09. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் (Pre Bid Meeting) 08/12/2021 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு மயான அபிவிருத்திக் குழுவின் ஒழுங்கமைப்புடன் கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். இதற்கு எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

10. கேள்வி ஆவணத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கேள்வி வைப்புப்பிணை (Nid Security) ஆனது இணைக்கப்படவேண்டும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பிடப் பட்ட தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் CIDA தரம் | கேள்விப் பிணைவைப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப் புத் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| KPS/KCDS /2021/01 | கட்டுமானம் மற்றும் எரிவாயு தகன இயந்திரப் பொறியினை நிறுவுதல் | 24.00 | 04 மாதம் | C5 அல்லது C6 | ரூபா 240,000.00 | 15.04.2022 |

**தலைவர்,**
**கிளிநொச்சி,**
**மயான அபிவிருத்திக் குழு,**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.** (C-3113) **29.11.2021.**



**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

0768226240 DHL (C-3014)



**கனடாவில் வேலைவாய்ப்பு WORK PERMITS**

தகுதிகள்:- A/L PASS/ DIPLOMA/DEGREE
ஆங்கில அறிவு



அனைத்து துறைகளிலும்
அனுபவம், அறிவு, ஆங்கிலப்புலமை உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777 (C-3089)



# TECHNO WORLD

## தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை

**A/L 2023 புதிய பிரிவு**

ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்

A/L 2021, Day Class – பகல் வகுப்புக்கள் ஆரம்பம்
( திங்கள் முதல் வெள்ளி காலை 8.30 முதல் 12.30 வரை)

**ஆரம்பம் - 01.12.2021**

A/L ஆசிரியர்கள் மாத்திரம் கொண்ட கல்வி நிறுவனம்

நிலையான இடத்தில் எமக்கே உரித்தான நவீன ஆய்வுகூட வசதிகளுடன்

| | |
|---|---|
| தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் - | ராகவன் (B.sc)<br>முருகநிறோயன் (B.sc)<br>நிறோஜன் (B.sc) |
| பொறியியல் தொழில்நுட்பம் - | அருணகுமார் [B. Tech Hons (Eng.)]<br>சிவஜன் (Lecturer)<br>நிசாந்தன் (HNDE) |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் - | திருக்குமரன் (B.sc in Agri.)<br>நிரோஜன் (B.sc in Agri.)<br>சிவகுமார் (B.sc in Agri.) |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் - | உமாகாந்தன் (BIT)<br>நஜன் (B.sc) |
| விவசாய விஞ்ஞானம் - | சாரங்கன் (B.sc in Agri.)<br>திருக்குமரன் (B.sc in Agri.)<br>நிரோஜன் (B.sc) |
| புவியியல் - | P.S.V தினேஷ் (B.A) |
| ஊடகக்கற்கை - | N.கஜிதரன் (B.A) |
| கணிதம் - | மோகன்ராஜ் (B.sc) |
| சித்திரம் - | ஜெயந்தன் (B.A) |

2022, 2021, Day Class மாணவர்களும் புதிதாக இணைய விரும்பும் மாணவர்களும் இணைந்துகொள்ளலாம்.
காலை 10.00 மணிமுதல் 5.00 மணிவரை
அனுமதிகளை நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். (C-3111)

077 017 5346


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.